வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

25.02.2021 வியாழக்கிழமை




# இலங்கை மீதான பிரேரணைக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவு

## இராஜாங்கச் செயலாளர் அறிவிப்பு



ஜெனிவா,பெப்.25

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்றுப் புதன்கிழமை கருத்துத் தெரிவிக்கும்போதே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ரனி பிளிங்கன் இவ்வாறு குறிப்பிட்டார்.

02



# டான் கலையகத்துக்கும் வந்தார் அமெ. தூதுவர்

யாழ்ப்பாணம், பெப். 25

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி. ரெப்லிட்ஸ் நேற்று டான் தொலைக்காட்சியின் கலையகத்துக்கு விஜ

02

# ஜனாதிபதியின் வாக்குமூலத்தை வைத்தே இலங்கை மீது நடவடிக்கை எடுக்கலாம்!

## அமெரிக்காவிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 25

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நானே கொன்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியதே மனித உரிமை மீறலுக்கான மிகப்பெரிய சாட்சியம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைத்துள்ளது.

02

# யாழ்.இந்து முடக்கம்!

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் தாதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவரின் மகன் கல்வி பயிலும் யாழ்.

02

# யாழ். சிறையில் கொத்தணியா?

## மேலும் நான்கு கைதிகள் உட்பட வடக்கில் 7 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், பெப்.25

வடக்கு மாகாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

02



# இலங்கைக்கு பாகிஸ்தான் உறுதியான ஆதரவளிக்கும்

## இம்ரான் கான் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25

எதிர்காலத்தில் இலங்கைக்கு பாகிஸ்தான் உறுதியான ஆதரவை வழங்கும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது பாகிஸ்தான் பிரதமர்

02

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் இலங்கை

## இல்லையேல் மாற்றுவழி குறித்து ஆராய்வு யாழில் அமெரிக்கத் தூதுவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.25

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு இலங்கைக்கு உள்ளது எனத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி.ரெப்லிட்ஸ், இதனை அரசாங்கம் செய்யவில்லை

02

## இலங்கையில் மனித உரிமை சீர்குலைவு

# பொறுப்புக்கூறல் செயல்பாடுகளுக்கு கனடா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்

## ஜெனிவாவில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் உறுதி

ஜெனிவா, பெப்.25

இலங்கையில் புரியப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்படுதை இந்தப் பேரவை உறுதி செய்யவேண்டியதன் அவசியத்தை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

பொறுப்புக்கூறல், மீளிணக்கம், அமைதி ஆகியவற்றுக்கு ஆதரவான நடவடிக்கைகளுக்குக் கனடா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று

02



# சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரானார் சாலிய பீரிஸ்

கொழும்பு, பெப். 25

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாடு முழுவதுமுள்ள மாவட்ட நீதிமன்றங்

02

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கை சு.கவின் நிலைப்பாடு இன்று அறிவிப்பு!

கொழும்பு, பெப். 25

2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## பாதிக்கப்பட்ட...

என்றால் மாற்று வழிகள் தொடர்பில் ஆராய வேண்டியிருக்கும் எனவும் எச்சரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களின் ஆசிரியர்கள், பிரதிநிதிகளை நேற்றுக் காலை தனியார் விடுதி ஒன்றில் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலகம் முழுவதும் மனித உரிமைகள் பேணப்படுவதிலும், அவை மீறப்பட்டமையால் பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலும் அதிக கரிசனை காட்டிவரும் நாடு அமெரிக்கா. அதனால்தான் இந்த விடயத்தில் நாம் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றோம். போர்க்காலத்தில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல், மனிதாபிமானத்துக்கு விரோதமான செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகள் நீதி வேண்டி காத்து நிற்கின்றனர். இலங்கை இறைமையுள்ள, ஜனநாயக நாடு. தனது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு இலங்கைக்கு உள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்றால் மாற்றுவழிகள் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கும். ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இது குறித்துத்தான் ஆராயப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நீதி கிடைக்கும் என பன்னிரண்டு ஆண்டுகளாக காத்திருக்கின்றார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக்கூட அறியாது பன்னிரண்டு ஆண்டுகளாகக் காத்திருக்கின்றார்கள்.

அத்தகையோரின் மனநிலை எத்தகையது என்பது புரிகின்றது. நிலைமை இப்படியே நீடித்துச் செல்ல முடியாது. இனியும் நீதி தாமதிக்கப்பட முடியாது. மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யும் கடப்பாடு அமெரிக்கா உட்பட ஒவ்வொரு நாட்டுக்கும் உள்ளது.

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக்கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையிலான தீர்வுகளை கண்டறிய வழிசெய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அதற்கான முயற்சிதான் முன்னெடுக்கப்படுகின்றது.

தனது கடப்பாட்டை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு. அதனைத்தான் நாமும் வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் அதற்கான முயற்சிகளைத்தான் முன்னெடுக்கின்றது. தமது பொறுப்பை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில்கொள்ளாவிட்டால், மாற்று வழிகளைத்தேட வேண்டிய நிர்ப்பந்தம் சர்வதேசத்துக்கு ஏற்படலாம். அந்தக் கட்டாயம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் ஏற்படும்.

மனித உரிமைகளை நிலை நிறுத்துவதில் பங்களிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் அமெரிக்க அரசாங்கம் விரும்புகின்றது. அதனால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா அதிக பங்களிப்பை எதிர்காலத்தில் வழங்குவதற்கு முன்னிற்கும்- என்றார். (அ-எ)

## பொறுப்புக்கூறல்...

அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் மார்க் கார்னியோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் மனித உரிமை நிலைமை சீர்குலைந்து செல்வதையிட்டுக் கனடா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் நேற்று உரையாற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையில், மனித உரிமைப் பாதுகாவலர்களும் குடிசார் சமூக அமைப்புக்களும் அச்சுறுத்தப்படுவது, நினைவு கூரல் ஒடுக்கப்படுவது, சிறுபான்மையினரின் உடல்கள் பலவந்தமாகத் தகனம் செய்யப்படுவது, சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்து செல்வது ஆகியவற்றை உள்ளடக்கிய மனித உரிமை நிலைமை சீர்குலைந்து செல்வதையிட்டுக் கனடா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

இலங்கையில் புரியப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்படுதை இந்தப் பேரவை உறுதி செய்யவேண்டியதன் அவசியத்தை, ஐ.நா. மனித உரிமைக ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை சுட்டிக்காட்டிறது. பொறுப்புக்கூறல், மீளிணக்கம், அமைதி ஆகியவற்றுக்கு ஆதரவான நடவடிக்கைகளுக்குக் கனடா தொடர்ந்து ஆதரவளிக்கும் எனத் தெரிவித்தார். (அ-எ)

## யாழ். இந்து...

இந்துக் கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் இன்று இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தொற்றுக்கு உள்ளானவராக அடையாளம் காணப்பட்டுள்ள நவாலியைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தரின் மகன் யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று வருகிறார்.

தரம் பத்தில் கல்வி பயிலும் குறித்த தாதிய உத்தியோகத்தரின் மகன் கல்வி கற்கும் வகுப்பு மாணவர்கள் நேற்று முற்பகலே வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

முதலாம் தவணைக்காக இன்று விடுமுறை விடப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று இந்துக்கல்லூரி நடைபெறாது என்று மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மீதான...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் கடந்த கால அட்டூழியங்களுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாமை தொடர்பில் கொண்டுவரப்படும் தீர்மானங்களை ஆதரிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை ஊக்குவிப்போம்.

சிரியா மற்றும் வடகொரியாவில் இடம்பெற்று வரும் மனித உரிமைகள் மீறல், இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் தென் சூடானின் நிலைமை குறித்து மேலும் விசாரணை நடத்தப்படவேண்டிய அவசியம்.

அத்தோடு மீண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்துகொள்ள அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது-என்றார்.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், 2018 ஜூன் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## சட்டத்தரணிகள்...

களில் நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் 5 ஆயிரத்து 162 வாக்குகளையும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்சா 2 ஆயிரத்து 807 வாக்குகளையும் பெற்றார்.

இதனால் பெரும்பான்மை ஆதரவுடன் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவாகியுள்ளார்.

வடக்கு மாகாணத்திலும் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்க்கு அதிக வாக்குகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

# 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்குமே தடுப்பூசி



கொழும்பு, பெப். 25

நாட்டில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கோவிட்-19 தடுப்பூசி மருந்து வழங்கப்படும் என்று தொற்று நோயியல் மற்றும் கொவிட்-19 நோய்த் தொற்று கட்டுப்படுத்தல் இராஜாங்க அமைச்சர், மருத்துவ வல்லுநர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

"முதல் கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொவிட் -19 தடுப்பூசி வழங்கப்படும்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் கொவிட்-19 தடுப்பூசி போடவேண்டிய நபர்களை அடையாளம் காண பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்படும்.

அதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் உதவி பெறப்படும்.

தடுப்பூசிக்கு முறையான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், சில அதிகாரிகள் எடுத்த பல்வேறு முடிவுகளின் காரணமாக கொவிட்-19 தடுப்பூசிக்கான வயது வரம்பு குறித்து கேள்விக்குறி எழுந்துள்ளது.

இலங்கை வாங்கிய 5 லட்சம் கோவிட் -19 தடுப்பூசி டோஸ்கள் நாளை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வர உள்ளது" என்றும் மருத்துவ வல்லுநர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

## டான் கலையக...

யம் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர் நேற்றுக் காலை டான் தொலைக்காட்சியின் கலையகத்துக்கும் வந்திருந்தார்.

டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன் தூதுவரை வரவேற்றுக் கலந்துரையாடினார்.

## ஜனாதிபதியின்...

இந்நிலையில், இந்தச் சாட்சியத்தை வைத்தே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸூக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்றுக் காலை தனியார் விடுதியொன்றில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கூட்டமைப்பு சார்பாக, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக சிறிதரன் குறிப்பிடுகையில்-

ஜெனிவாவில் கொண்டுவரப்படஇருக்கின்ற தீர்மானம் தொடர்பாக மற்றும் அந்தத் தீர்மானத்துக்கு இருக்கின்ற சவால்கள், அந்தச் சாவல்களை எதிர்கொள்வதற்காக ஒருங்கிணைந்த நாடுகள் எவ்வாறான விடயங்களை எதிர்கொள்கின்றன, அந்தச் சாவால்களை அவர்கள் எவ்வாறு சாமாளிக்கப் போகிறார்கள், அதற்கு தமிழர் தரப்பான எங்களுடைய பங்களிப்பு என்ன மற்றும் ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடவேண்டிய விடயங்கள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும், இன்றுள்ள களச்சூழலில் தமிழ் மக்கள் எவ்வாறான பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர் மற்றும் இந்த அரசாங்கம் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டம் நடந்து முடிந்த பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், பொதுமக்கள் போன்றோரை விசாரணை என்ற போர்வையில் அச்சுறுத்தி வருவதையும் நாங்கள் அவருடன் கலந்துரையாடியுள்ளோம்.

அத்துடன், அண்மையில் அம்பாறையில் உகுண பிரதேசத்தில் உரையாற்றும் போது, 'பிரபாகரனை நான் கொன்றேன்' என்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ சொன்னதே மனித உரிமை மீறலுக்கான பெரிய சாட்சியம். அதைவைத்தே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸிடம் வலியுறுத்தியுள்ளோம்-என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

பில் தமது கட்சியின் நிலைப்பாடு இன்று அறிவிக்கப்படும் என்று சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இன்று கட்சியின் நிறைவேற்றுக்குழு கூடி ஆராய்ந்த பின்னர், கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## யாழ். சிறையில்...

இவர்களில் 4 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட 431 பேரின் பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

கடந்த 22 ஆம் திகதி கைதி ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில், மேலும் 4 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

மேலும் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்.

இதேவேளை, மல்லாவியில் புத்தளத்திலிருந்து வருகை தந்த பெண் உட்பட இருவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு ஒன்றுக்கு புத்தளத்திலிருந்து வருகை தந்தோர் பங்கேற்றிருந்தனர். இந்த இறுதிச் சடங்கில் பங்கேற்ற ஒருவருக்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. மேலும் இருவருக்கு தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என அவர் தெரிவித்தார். (அ-எ)

## இலங்கைக்கு...

இம்ரான் கான் உறுதியளித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பின்போது பாகிஸ்தானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதிக்கு இம்ரான் கான் அழைப்பு விடுத்தார்.

இருதரப்பு வர்த்தகம், முதலீடுகள் மற்றும் வணிக ஒத்துழைப்பு உட்பட வலுவான பொருளாதார கூட்டாட்சியை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை பிரதமர் இம்ரான் கான் இதன்போது சுட்டிக்காட்டினார்.

விவசாயம், சுற்றுலா, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, கல்வி மற்றும் கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது பேசப்பட்டுள்ளது.

Eelanadu
25.02.2021 வியாழக்கிழமை
சார்வரி, மாசி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# மீண்டும் அமெரிக்கா

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா டெப்ளிஸ் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்து, பல்வேறு தரப்புக்களையும் சந்தித்துச் சென்றிருக்கின்றார். இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் மீளவும் பேசுபொருளாகியிருக்கும் நிலையிலும், இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் புதியதொரு பிரேரணையை கொண்டுவருவதற்கான முயற்சிகளில் பிரித்தானியா இறங்கியிருக்கின்ற நிலையிலுமே அமெரிக்க தூதுவரின் யாழ் விஜயம் இடம்பெற்றிருக்கின்றது.

அமெரிக்க தூதுவரின் யாழ். விஜயமும் அமெரிக்காவின் புதிய இராஜாங்கச் செயலர் அன்ரொனி ஜே. பிளிங்கனின் இலங்கை தொடர்பான அறிவிப்பும் சமவேளையில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறாமையை சுட்டிக்காட்டியிருக்கும் பிளிங்கன், சர்வதேச அளவில் மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் ஊக்குவிப்பதிலும் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலுள்ள நட்பு நாடுகளுடன் அமெரிக்கா ஒத்துழைப்புடன் பணியாற்ற விரும்புவதாகவும் அறிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவின் புதிய நிர்வாகம் மீளவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பணியாற்றுவதற்கான விருப்பத்தை வெளியிட்டிருக்கும் நிலையிலேயே புதிய அமெரிக்க இராஜாங்கச் செயலரின் இலங்கை தொடர்பான அறிவிப்பும் வெளியாகியிருக்கின்றது. இது, ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது. அதாவது, புதிய அமெரிக்க நிர்வாகம் நிச்சயம் மீளவும் இலங்கையின்மீது மனித உரிமைகள் சார்ந்து, அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான தீர்மானத்திலிருக்கின்றது. அமெரிக்காவில் ஒபாமா நிர்வாகம் ஆட்சியிலிருந்தபோதுதான் 2012இல் இலங்கை மீதான பிரேரணையொன்றை அமெரிக்கா முன்வைத்திருந்தது.

அமெரிக்காவின் ஆதரவில்லாவிட்டால், நிச்சயம் அந்தப் பிரேரணை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வெற்றி பெற்றிருக்காது. அதேபோன்று, அமெரிக்காவில் குடியரசு கட்சி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறியிருந்தது. இது, அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையுடன் தொடர்புபட்ட ஒன்றல்ல, மாறாக, குடியரசு கட்சியின் அரசியல் நிலைப்பாடு சார்ந் தது. குடியரசு கட்சி அதன் இஸ்ரேலிய ஆதரவு நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே மனித உரிமைகள் பேரவையை எதிர்த்திருந்தது. மனித உரிமைகள் பேரவை ஆரம்பிக்கப்பட்டபோதே அப்போது ஆட்சியிலிருந்த குடியரசு கட்சியின் புஷ் நிர்வாகம் பேரவையை நிராகரித்திருந்தது. பின்னர், ஒபாமாவின் வெற்றியைத் தொடர்ந்தே மனித உரிமைகள் பேரவையுடன் இணையும் கொள்கை நிலைப்பாட்டை அமெரிக்கா கையிலெடுத்தது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பைடன் நிர்வாகம் மீளவும் மனித உரிமைகள் பேரவையுடன் இணையும் முடிவை எடுத்திருக்கின்றது. அமெரிக்கா அதிகம் ஐ.நா.விலிருந்து விலகிச் செல்லுமாயின், ஐ.நா.வில் மேலாதிக்கம் செய்யும் ஒரு நாடாக சீனா வந்துவிடும். எனவே, அமெரிக்கா அதிகம் ஐ. நாவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றவாறான கருத்துக்கள் அமெரிக்க அரசியல் மட்டத்தினரிடம் உண்டு. இவ்வாறானதொரு பின்புலத்தில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து, உலகளாவிய மனித உரிமைகள் மீதான அமெரிக்க கரிசனையை மீளவும் அமெ ரிக்கா உறுதிப்படுத்திக்கொள்ள முயற்சிக்கும். அது, தற்போது மிகவும் தெளிவாகவே தெரிகின்றது.

தற்போதைய இலங்கை அரசாங்கம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்க மறுக்கும் நிலையில், மீளவும் 2015இற்கு முன்னர் இடம்பெற்றது போன்றதொரு நிலைமை ஏற்படலாம். இதில், அமெரிக்காவே பிரதான பங்கை வகிக்கும். அமெரிக்காவினால் மட்டுமே அவ்வாறானதொரு பாத்திரத்தை வகிக்கவும் முடியும். அமெரிக்காவின் நிழல்படாத அழுத்தங்களால் இலங்கைக்கு நெருக்கடிகளையும் ஏற்படுத்த முடியாது.

# சர்வதேச சமூகம் குறித்து வெளிவிவகார அமைச்சரின் தவறான கண்ணோட்டம்!

- அலசுவது **இராஜதந்திரி** -



இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் உரையாற்றியபோது, பேரவையில் அங்கம் பெறும் நாடுகளிடம் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையை நிராகரிக்குமாறு கேட்டிருந்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் இக்கோரிக்கையை நோக்கும்போது, சர்வதேச சமூகம் குறித்து எத்தகைய தவறான கண்ணோட்டத்தை இலங்கை கொண்டுள்ளதென்றே அறிந்து கொள்ளமுடிகின்றது. ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கை விவகாரம் எதிரொலிக்க ஆரம்பித்த காலம் முதல், இலங்கைமீது ஜெனிவாவில் இன்றுவரை கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் இலங்கையில் மூன்று தசாப்தகால யுத்தம் ஏற்படுத்திய அழிவுகள் மற்றும் யுத்தக் குற்றங்கள் என்று வரையறை செய்யப்பட்டவை கண்டறியப்பட்டு, நீதி வழங்கப்பட வேண்டுமென்பதையே வலியுறுத்துவதாக இருந்தன.

ஆனால், ஜெனிவா பிரேரணையை இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு விடயமாக கருதாமல், இலங்கைக்கு எதிரான நடவடிக்கை என்று இலங்கையின் ஆட்சியாளர்கள் கருதி வருகின்றனர்.

**தவறான கண்ணோட்டம்**

இதன் வெளிப்பாடகவே, ஜெனிவா பிரேரணையை இலங்கைக்கு எதிரான பிரேரணை என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளதோடு, சர்வதேச சமூகத்தின்மீதும் தவறான கண்ணோட்டத்தை இலங்கை கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சர்வதேச சமூகமோ அல்லது இந்தியாவோ இலங்கைக்கு எதிராக செயல்பட வேண்டியிருந்தால் மூன்று தசாப்த கால யுத்தம் இடம்பெற்ற வேளையிலேயே இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு பிரச்னைகளை ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால், இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னை அரசியல் ரீதியாக தீர்க்கப்படவேண்டுமென்பதில் சர்வதேச நாடுகள் பல முனைப்பாக இருந்ததோடு, அந்நாடுகளில் பல ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் உறுப்பு நாடுகளாகவும் இருக்கின்றன என்பதுவும் குறிப்பிடத்தக்கது. சர்வதேச சமூகத்தின் அனுசரணையை தமிழீழ விடுதலைப் புலிகள் உரிய வகையில் கையாளத் தவறியமையே அதன் முற்று முழுதான அழிவுக்கு காரணமாகவும் அமைந்திருந்தது.

மறுபுறத்தே தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியாகவே வடக்கு - கிழக்கு பிரச்னையை கையாள வேண்டுமென்பதில் சர்வதேச சமூகம் உறுதியாக இருந்த காரணத்தினாலேயே, 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகள் முழு அளவில் முன்னெடுக்கப்பட்டதோடு, சர்வதேச சமூகமும் மௌனமாக இருந்தது.

**அப்பாவி மக்கள் பாதிப்பு**

இருந்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற ரீதியில் கண்மூடித்தனமாக யுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அப்பாவி மக்களும் பாதிக்கப்பட்டதையே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உறுப்பு நாடுகள் கவனத்தில் எடுத்துள்ளன.

இந்நிலையில், ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணையை இலங்கைக்கு எதிரான பிரேரணை என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிடுவாரேயானால், அவர் தனது நாட்டு மக்களுக்கே அநீதியான ஒரு போக்கை கடைப்பிடிக்கிறார் என்றே கருத முடியும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாடு பிளவுபடுவதை தடுத்ததாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிடுவாரேயானால், யுத்த அனர்த்தத்தினால் சகல தரப்பினராலும் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களும் இலங்கையர்களே என்பதை வெளிவிவகார அமைச்சர் அறிய வேண்டியவராகின்றார். இந்நிலையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்நாட்டின் வடக்கு-கிழக்கு மக்களே தமக்கு ஜெனிவா மூலமாக நீதியை வேண்டி நிற்கிறார்கள் என்பதையும் அவர் கருத்தில் கொள்ளவேண்டியவராகின்றார்.

எனவே, ஜெனிவாவில் இலங்கைமீதான பிரேரணையை எவ்வகையில் சிறந்த இராஜதந்திர அணுகுமுறையோடு கையாள முடியும் என கவனத்தைச் செலுத்துவதைவிட, அப் பிரேரணை இலங்கைக்கு எதிரானதாகும் எனக் குறிப்பிடுவது, இலங்கைமீது சர்வதேச சமூகம் மேலும் அவநம்பிக்கை கொள்ளவைப்பதாக அமையும் என்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சவாலான வேலைகளை முடித்து வெல்வீர்கள். சலிப்பு நீங்கும். பெரிய பதவியில் உள்ளவர்களின் உதவி, ஆதரவு கிடைக்கும். பணிகளுக்கு உதவு வதற்கு நல்லவர் ஒருவர் துணை நிற்பார்.

**இடபம்**
பணியாளர்கள் உயர்நிலைக்கு வருவீர்கள். யோகம் வரும். பொழுது போக்குகளில் கவனம் செல்லும். வேதனைகள் தீரும். உங்களால் பயன் அடைந்தவர்கள் உதவி செய்வார்கள்.

**மிதுனம்**
முதலிடத்தைப் பிடிக்கும் முயற்சியில் இறங்குவீரகள். மனதில் பலம் கூடும். வாழ்வில் புதிய பாடம் கற் பீர்கள். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பகைகள் விலகும்.

**கடகம்**
வியாபாரத்தை விரிவடையச் செய்வீர்கள். புகழ் கூடும். வாய்ப்புக் கிடைத்து உங்கள் திறமையை நிரூபிப்பீர்கள். கோபத்தை வென்று மகிழ்வீர்கள். புதிய பொருள் வாங்குவீர்கள்.

**சிம்மம்**
பழைய முறைகளை மாற்றுவீர்கள். பணியாளரின் கை ஓங்கும். பதற்றம் ஏற்படும் நேரத்திலும் அமை தியாக கையாளுவீர்கள். சிலருக்கு எதிர்பாலின நண்பர்களால் நன்மை உண்டாகும்.

**கன்னி**
வீண் செலவுகள் குறையும். மனநிறைவு ஏற்படும். முயற்சியை பெருக்குவீர்கள். கடன் பிரச்னை கட்டுக்குள் இருக்கும். வெற்றி பெற எடுக்கும் முயற்சி களில் பலன் கிடைக்கும்.

**துலாம்**
உரையாடல்களால் கூடுதல் நன்மை உண்டாகும். நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் என்று உணர் வீர்கள். பிறர் மீது குற்றம் காணும் குணத்தை விட்டுவிடுங்கள்.

**விருட்சிகம்**
வாழ்க்கைக்கு பயன்படும் நல்ல பாடம் ஒன்றைக் கற்பீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். உங்களுக்கு ஆலோசனை தரக்கூடிய ஒருவரின் உதவி கிடைக்கும்.

**தனுசு**
மற்றவர்கள் பழிக்கும்படியான செயல்களைச் செய்ய வேண்டாம். மற்றவர் வம்புக்குப் போய் சிக்கலில் மாட்ட வாய்ப்பு உள்ளது. மனதுக்கு பிடித்த விஷயங்கள் நடைபெற்று மகிழ்வூட்டும்.

**மகரம்**
நல்ல அறிவுரைகளை மனப்பூர்வமாக ஏற்றுப் பயன்பெறுவீர்கள். உங்களை ஊக்கப்படுத்தும் செயலால் வெற்றி அடைவீர்கள். நேரத்தை வீண டிக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.

**கும்பம்**
உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். குடும்பத்தில் சுமை கூடும். கடன் சுமை குறைய உதவி கிடைக் கும். நல்ல செய்தி வரும். தள்ளிப்போன செயல் முடியும். விருப்பங்கள் நிறைவேறும்.

**மீனம்**
உங்களின் பணிகளை பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். உறவினர்களின் பகை ஒரு சுப நிகழ்ச் சியில் தீரும். பிள்ளைகளை கண்டிக்கும்போது கடுமை காட்ட வேண்டாம்.

# வடக்கு மாகாணத்தில் கொரோனா பாதிப்பு ஆயிரத்தைத் தாண்டியது



யாழ்ப்பாணம்,பெப்.25

**வடக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. கடந்த 2020 மார்ச் முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் இந்த எண்ணிக்கை பதிவாகியுள்ளது.**

மன்னார் மாந்தை மேற்கில் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் உட்பட வடக்கில் நேற்றுமுன்தினம் மாத்திம் 42 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள் ளது என வடக்கு மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப் பட்ட 443 பேரின் பி.சி.ஆர். பரிசோதனையில் 29 பேருக்கு கொரோனா தொற்று உறு திப்படுத்தப்பட்டது.

இவர்களில் ஆறு குடும் பங்களைச் சேர்ந்த 24 பேர் மன் னார் மாந்தை மேற்கைச் சேர்ந்த வர்களாக உள்ளனர். அவர்கள் கடந்த வாரம் திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்தனர்.

இந்த திருமண நிகழ்வில் மன் னார் ஆடைத் தொழில்சாலை தொற்றாளர்களுடன் தொடர் புடையோரும் பூநகரி வலைப் பாடு கிராமத்தில் தொற்று ஏற் பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களும் பங்கேற்றுள் ளனர்.

இவ்வாறு திருமண நிகழ் வில் பங்கேற்றவர்களிலேயே ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 24 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், மன்னார் மடு பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவருக்கும் கொரோனா தொற்று நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்டது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் பொறுப்பு தாதிய உத்தியோ கத்தர், தாதிய உத்தியோகத்தர் மற்றும் நோயாளி ஒருவருக்கும் என மூவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டது.

அத்துடன், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட பெண்ணொருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. இவரது வீட் டுக்கு மன்னாரில் உள்ள உறவி னர்கள் வந்து திரும்பிய நிலை யில் தொற்று அறிகுறியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருந்தார். இந்நிலையில், இவரிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனைவிட, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் முன்னெடுக்கப் பட்ட பரிசோதனையில் பருத் தித்துறையைச் சேர்ந்த 13 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட் டது- என்றார். (எ)

# தந்தையும் மகளும் விபத்தில் படுகாயம்

மட்டக்களப்பு,பெப்.25

மட்டக்களப்பில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் முன்பள்ளிக்குச் சென்ற சிறுமி உட்பட இருவர் படுகாயம டைந்தனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் ஓட்டோவுடன் தனி யார் பஸ் மோதி விபத்துக்குள் ளானது.

இதன்போது ஓட்டோவை செலுத்திச்சென்ற தந்தையும் அதில் பயணம் செய்த சிறுமி யும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத் தியசாலைக்கு கொண்டுசெல் லப்பட்டதுடன் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை மட்டக் களப்பு தலைமைய போக்கு வரத்து பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர். (எ)





# பாகிஸ்தான் - இலங்கை இடையே ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

## இரு பிரதமர்கள் முன்பு கையொப்பம்

கொழும்பு,பெப்.25

பாகிஸ்தான் பிரதமர் இம் ரான் கானின் இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பொருளாதார ரீதியில் முக்கியத் துவம் வாய்ந்த ஐந்து ஒப்பந்தங் கள் கைச்சாத்திடப்பட்டன.

பிரதமர் இம்ரான் கான் நேற்று முன்தினம் மாலை நாட்டு விஜயம் மேற்கொண்டி ருந்த நிலையில் அலரி மாளிகை யில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வுடனான சந்திப்பைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தி டப்பட்டன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஆகியோரின் முன்னிலையில் இரு நாட்டு பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இரு நாடு களுக்கும் இடையில் பின்வரும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டன,

1. சுற்றுலா ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

2. இலங்கை முதலீட்டு சபைக்கும் பாகிஸ்தான் முத லீட்டுச் சபைக்கும் இடையி லான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

3. இலங்கை தொழில்துறை, தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.டி.ஐ), மற்றும் பாகிஸ்தான் கராச்சி பல்கலைக்கழகம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

4. கொழும்பு தொழில்து றைத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இஸ்லாமாபாத் பல் கலைக்கழகத்துக்கு இடையி லான ஒத்துழைப்பு ஒப்பந்தம்.

5. கொழும்பு பல்கலைக்கழ கம் மற்றும் பாகிஸ்தான் லாகூர் பொருளாதாரக் கல்லூரி ஆகிய வற்றுக்கு இடையிலான புரிந்து ணர்வு ஒப்பந்தம் என்பன கைச் சாத்திடப்பட்டன. (எ)

# ஐ.நாவில் இலங்கை சார்பாக பேசுவதற்கு 18 நாடுகள் உறுதி

## உயர்மட்ட வட்டாரங்கள் தகவல்

**கொழும்பு, பெப்.25**

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வின்போது இலங்கை சார்பாகப் பேசுவதற்கு 18 நாடுகள் உறுதியளித்தன என்று உயர்மட்ட வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.**

இந்த நாடுகளின் உயர் மட்டப் பிரிவானது, இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும். தகவல்களின்படி, இந்த 18 நாடுகளில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் உறுப்பினர்களைக் கொண்ட நாடுகளும் உள்ளதுடன் அவை இலங்கைக்கு ஆதரவாக இருக்கும்.

யுத்த காலத்தில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் பிரச்னைகள் குறித்து இலங்கை மீது தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான முக்கிய நாடுகளின் குழுவினரின் முயற்சியைத் தடுக்க தமது நட்பு நாடுகளின் ஆதரவைக் கோரி இலங்கை ஒரு தீவிரமான சர்வதேச பிரசாரத்தை மேற்கொண்டுள்ளது.

ஐ.நா. தீர்மானத்தின் முதல் வரைவு தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இது, 2015இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்திற்கு ஒத்ததாக இருப்பதாக இலங்கை நம்புகிறது.

2019இல் பதவியேற்ற தற்போதைய அரசாங்கம் கடந்த ஆண்டு மார்ச்சில் இந்தத் தீர்மானத்தின் இணை அனுசரணையிலிருந்து விலகியது.

இதேவேளை, இலங்கை குறித்த தனது நிலைப்பாட்டை இந்தியா இதுவரை தெரிவிக்கவில்லை. இந்தியாவுடன் கூட்டாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான முன்னைய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் இருந்து தற்போதைய அரசாங்கம் விலகியுள்ளமை தொடர்பாக இலங்கை-இந்தியா இடையே நெருடல்கள் உள்ளன.

மேலும், யாழ்ப்பாணத் தீவுகளில் மூன்று தீவுகளை மின் உற்பத்தித் திட்டத்துக்காகச் செயற்படுத்த சீன நிறுவனத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளமை குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது. இந்தியாவின் தெற்கு கடலோரப் பாதுகாப்புக் கவலைகளை மேற்கோளிட்டு சீன நிறுவனம் இலங்கையின் வடக்கில் கால் பதிப்பதை இந்தியா எதிர்க்கிறது.

இதேவேளை, இந்தியாவின் இந்தத் தலையீட்டைக் கடுமையாக எதிர்க்கும் சீன நிறுவனம் கடந்த திங்களன்று ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில், சர்வதேச ரீதியிலான போட்டி மற்றும் ஏல செயன்முறை மூலம் இந்தத் திட்டத்தை வென்றதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வடக்கின் யாழ்ப்பாணத் தீவுகளில் சீனாவின் ஆதிக்கம் இருக்கக்கூடாது என்பதையும் இந்தியா, ஈழத் தமிழருடன் இணைந்து செயற்படுவதன் மூலம் இந்தியாவின் தென்முனையை நிரந்தரமாகப் பாதுகாக்க முடியும் என்தையும் வடக்கில் தமிழர் தரப்பு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறினரென 3,222 பேர் கைது

கொழும்பு, பெப். 25

தனிமைப்படுத்தல் விதிகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய நேற்று புதன் கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் தற்போது வரை 3,222 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 3,150 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான கண்காணிப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். குறிப்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கண்காணிப்பை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, நிறுவனங்களின் நிர்வாகிகள் தனிமைப்படுத்தல் விதிகளைக் கடைப்பிடிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்-என்றார்.

# அதிரடிப்படை என கூறி கொள்ளை கம்பஹாவில் ஐந்து பேர் சிக்கினர்

கொழும்பு, பெப். 25

விசேட அதிரடிப் படை அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு வீடொன்றில் புகுந்த குழுவொன்று அங்கு பணம் மற்றும் பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

நேற்று முன் தினம் கம்பஹா - பியகம பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 58,000 ரூபா பணமும் 4 கைபேசிகளும் கொள்ளையிடப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த கொள்ளையர்கள் சிவில் உடையில் வீட்டுக்கு சென்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார்.

# பி.சி.ஆர். பரிசோதனை தாமதமே தொற்றாளர் குறைவுக்கு காரணம்

## உபுல் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு,பெப்.25

பி.சி.ஆர். பரிசோதனைகளில் ஏற்பட்டுள்ள தாமதத்தாலேயே நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.



கடந்த வாரம் நாளாந்தம் சுமார் ஆயிரம் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அண்மைய சில நாள்களாக 500 இற்கும் குறைவான தொற்றாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சாதாரண தர மாணவர்களுக்காக 40 விசேட பரீட்சை நிலையங்கள்

கொழும்பு, பெப். 25

கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக 40 விசேட பரீட்சை நிலையங்களை அமைக்கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி அமைக்கப்படும் இந்த விசேட நிலையங்களுக்கு 50 ஆயிரம் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு கொரோனா தொற்று பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை 2021 மார்ச் 1 ஆம் திகதி முதல் மார்ச் 10 திகதி வரை நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும் 622,352 பேர் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் 4513 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் குறிப்பிட்டார்.

# மனித உரிமைகள் பேரவையில் சவால்களை எதிர்கொள்ள தயார்!

## அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25

மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தயாராக உள்ளது என அரச தரப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெலிகமவில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலம் இலங்கை போன்ற வளரும் நாடுகளின் முன்னேற்றத்தில் தலையிடுவதற்கு என பல சர்வதேச அமைப்புகள் செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் மனித உரிமைகள் பேரவை முன்வைக்கும் கேள்விகளுக்கு அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி பதிலளிப்பார் என்றும் படையினர் மற்றும் நாட்டின் இறையாண்மையையும் அவர் பாதுகாப்பார் என்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா குறிப்பிட்டார்.

# லீலாதேவியிடம் விசாரணை!

கிளிநொச்சி, பெப். 25

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜாவிடம் நேற்று புதன் கிழமை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த17ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினர் என்னை விசாரணைக்காக கொழும்பு வருமாறு எனது மகளின் வீட்டில் அறிவித்தல் ஒன்றை வழங்கியிருந்தார்கள். எனது வயது மற்றும் சுகவீனம் தொடர்பில் நான் அவர்களுக்கு தொலைபேசி ஊடாக கூறியிருந்தேன்.

வவுனியா அல்லது கிளிநொச்சிக்கு என்னால் வர முடியும் எனவும் அவர்களிடம் குறிப்பிட்டிருந்தேன். அதற்கு அமைவாக கிளிநொச்சிக்கு வரச் சொன்னார்கள். நான் சென்றிருந்தேன்.

இதன்போது பல விவரங்களை திரட்டி வைத்தனர். வங்கிக் கணக்குகள், வங்கிக்குப் பணம் வருவது உள்ளிட்ட விவரங்கள அவர்கள் வைத்திருந்தார்கள். எனது வங்கிக் கணக்கு தொடர்பில் துருவி ஆராய்ந்தார்கள். அதற்கு நானும் பதிலளித்திருந்தேன். எனது மகன் வெளிநாட்டில் உள்ளார். அதேபோல் எனது சகோதரங்களும் வெளிநாட்டில் உள்ளார்கள். காணி விற்ற பணத்தையும் வங்கியில்தான் போட்டுள்ளேன் எனவும், மகன் எனக்கு அனுப்பிய பணத்தையும் இதில்தான் போட்டுள்ளேன் எனவும் அவர்களிடம் கூறியிருந்தேன்.

ஜெனிவாவிற்கு 2010ஆம் ஆண்டு சென்றீர்களா என வினாவினார்கள் . 2010 நான் செல்லவில்லை எனவும், 2018 மார்ச்சிலிருந்து தொடர்ச்சியாக சென்றிருந்தேன் எனவும் நான் தெரிவித்திருந்தேன்.

அங்கு என்ன கதைக்கிறீர்கள் என கேட்டார்கள். எமக்கு நீதி கிடைக்கவில்லை, நாங்கள் எமது பிள்ளைகளை கையளித்தோம். சரணடைந்தார்கள். இலங்கை அரசிடம் அழுத்தம் கொடுத்தாவது எமது பிள்ளைகளை மீட்டு தாருங்கள் என்று கோரியிருந்தோம்.

அத்தோடு, இலங்கையில் நீதி கிடைக்காது. அந்த நீதி சர்வதேசத்திடமிருந்துதான் கிடைக்க வேண்டும் என்பதையும் நாம் கூறியிருந்தோம் என தெரிவித்தேன். அவர்கள் என்னிடம் எதிர் பார்த்த பதில்களும், விசாரணை குறிப்புக்களும் திருப்திகரமானதாக அவர்களிற்கு அமைந்திருக் கும் என நான் நம்புகிறேன் -என்றார்.




# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, பெப். 25

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறையிலான உணவுதவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின.

இதனையொட்டி உறவுகளால் நேற்று பிற்பகல் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இவர்கள் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் போராட்டப் பந்தலுக்கு முன்பாகவே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் (நேற்று) நான்கு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளனது. எமக்கான நீதி கிடைக்கவில்லை. எமது போராட்டங்களில் பங்குபற்றிய பல தாய், தந்தையர்கள் பிள்ளைகளை காணாத ஏக்கத்துடனேயே உயிழந்துள்ளனர்.

எமது பிள்ளைகள் அழிக்க முடியாத சாட்சிகளாகியுள்ளனர். அவர்களுக்கு நீதி கிடைக்கும்வரை எமது போராட்டம் தொடரும். அந்தவகையில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை நாம் எதிர்ப்பார்த்து நிற்கிறோம்- என்றனர்.

# ஜெனிவாவில் எமக்கு எதிராக இந்திய அரசு செயற்பாடாது!

## அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

கொழும்பு, பெப்.25

**ஜெனிவா தொடரில் எவ்வாறான முடிவுகள் எடுக்கப்பட்டாலும் தமது நாட்டின் அரசமைப்புக்கு கட்டுப்பட்டே இலங்கை செயற்படும் எனவும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா செயல்படாது எனவும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.**



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாட்டின்போது ஜெனிவா தொடர் மற்றும் இந்தியாவின் நிலைப்பாடு ஆகியன தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் நீண்டகால உறவு இருக்கின்றது. பொருளாதாரம் மற்றும் கலாசார ரீதியில் அந்நாடு எமக்கு முக்கியத்துவம்மிக்க நாடாகும். எனவே, இலங்கைக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய நடவடிக்கையில் இந்தியா ஒருபோதும் ஈடுபடாது என நாம் உறுதியாக நம்புகின்றோம். அந்தவகையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரிலும் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்படாது.

கிழக்கு முனையம் விவகாரத்தையும், ஜெனிவாவில் இந்தியா எடுக்கும் என எதிர்ப்பார்க்கப்படும் நிலைப்பாட்டையும் தொடர்புபடுத்துவது பொருத்தமான செயலாக அமையாது. கிழக்கு முனையம் தொடர்பில் பிரச்னை ஏற்பட்டிருந்தாலும் தற்போது மேற்கு முனையம் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையால் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும். அனைத்து நடவடிக்கைகளும் எமது நாட்டு அரசமைப்பின் பிரகாரமே முன்னெடுக்கப்படும். கடந்த ஆட்சியின்போது சிற்சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை எமது நாட்டு அரசமைப்புக்கு முரணானவை, எனவே, உள்ளக நெறிமுறையை மீறி செயற்படமுடியாது.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் தமக்கான அதிகார எல்லையை அறிந்து செயற்படவேண்டும். நாடுகளின் உள்விவகாரங்களில் கையடிப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல-என்றார்.

# இணையத்தின் மூலம் 17 இலட்சம் ரூபா மோசடி செய்த கும்பல் வசமாக சிக்கியது

கொழும்பு, பெப். 25

இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பண பரிவர்த்தனையின் போது சுமார் 17 இலட்சத்து 45,000 ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டு வந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றை களனி குற்றவியல் பிரிவினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பேலியகொடை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாடொன்றிற்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக இந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பரிசுத் தொகை கிடைத்துள்ளதாக தெரிவித்து அந்தத் தொகையை வைப்பிலிடுமாறு கூறியே இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையரை இலவசமாக நாட்டுக்கு அழைத்து வராதது ஏன்?

## சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி

கொழும்பு, பெப். 25

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களை இலவசமாக நாட்டுக்குள் வரவழைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது ஏன் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார்.

எனினும், பாராளுமன்ற விதிமுறைகளை மீறி எதிர்க்கட்சி தலைவர் செயற்படுவதாக ஆளும் தரப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை, சபை ஒத்திவைக்கப்படும்வேளையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்கள் குறித்து கேள்வி எழுப்பினார்.

அவர் இதன்போது கூறுகையில்,

நாற்பதாயிராத்திற்கும் அதிகமான இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளில் அநாதரவாகியுள்ளனர். அவர்களை நாட்டுக்கு மீண்டும் வரவழைப்பதில் அதிகளவில் பணம் அறவிடப்படுகின்றது. விமானச்சீட்டுக்கும், தனிமைப்படுத்துவதாக கூறி ஹோட்டல்களுக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும், பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குமென அவர்களிடமிருந்தே அறவிடப்படுகின்றது.

இப்போது வரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களத்தில் 1400 கோடி ரூபா சேமிப்பில் உள்ளது. இந்த பணத்தைச் செலவு செய்து எமது மக்களை இலவசமாக நாட்டுக்கு அழைத்துவர ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதுள்ளது. வெளிநாடுகளில் பணிபுரியும் எமது மக்கள் சேமித்து வைத்துள்ள பணத்தைச் செலவு செய்து நாட்டிற்கு வரவேண்டியுள்ளது-என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்பிய ஆளும் கட்சி பிரதம கொறடாவான



அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ,

எதிர்க்கட்சித் தலைவர் எந்த வித நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடங்காத ஒரு விடயம் குறித்து சபையில் பேசிக்கொண்டுள்ளார். சபை ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சபை விதிமுறைகளை மீறிச் செயல்பட்டு வருகின்றார் என எதிர்க்கட்சி தலைவருடன் வாக்குவாதப்பட்டார். இதனால் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை அடுத்து சபை ஒத்திவைக்கப்பட்டது.

# நெல் கொள்வனவு இடைநிறுத்தம்!

## அமைச்சர் மஹிந்தானந்த அறிவிப்பு

கொழும்பு, பெப். 25

பசளை நிவாரணம் பெற்றுக் கொள்ளும் விவசாயிகளிடம் இருந்து அரசாங்கத்தினால் நெல் கொள்வனவு செய்யப்படும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூன்று இலட்சம் மெற்றிக்தொன் அளவிலான நெல்லை சேமிப்பில் வைத்துக்கொள்வதற்கான வேலைத்திட்டத்திற்கு அமைவாக ஜனாதிபதியினால் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஹெக்டேயருக்கு அதிகமான நெற்செய்கை செய்யக்கூடிய விவசாயிகளிடம் இருந்து ஆயிரம் கிலோ நெல் பெற்றுக்கொண்டோம். இது தொடர்பில் விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து பசளை பெற்றுக்கொள்ளும் விவசாயிகளிடம் இருந்து நெல்லை பெற்றுக்கொள்வதை நிறுத்தி எந்தவொரு விவசாயிகளிடம் இருந்தும் நெல்லை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தையில் போட்டித்தன்மையான விலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சந்தை விலைக்கு நெல்லை கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரிசி விலையை 97 ரூபாவுக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்ய அனுமதிக்கப்போவதில்லை. அரிசியின் விலை நிர்ணயம் தொடர்பாக விடயம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் எடுக்கப்படவுள்ளது-என்றார்.

# கிரிக்கெட் சபைத் தேர்தலுக்கு சீலரத்ன தேரரும் வேட்பு மனு

கொழும்பு, பெப்.

இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் பதவிக்கு பத்தரமுல்லே சீலரத்ன தேரர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

நேற்று புதன்கிழமை அவர் இவ்வாறு வேட்பு மனு தாக்கல் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தின் சென். அன்ரனிஸ் கிரிக்கெட் கழகத்தின் சார்பிலேயே அவர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தில் இலங்கையை ஐ.சி.சிக்கு பரிந்துரைத்தல் கட்டாயம்

## பிரிட்டனிடம் கோரி சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு தீர்மானம்

லண்டன், பெப். 25

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் 46ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரில், பிரிட்டனால் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு (ICC) பரிந்துரைத்தல், சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையினை (IIIM) உருவாக்குதல் மற்றும் இலங்கைக்கான ஐ.நா நிரந்தர சிறப்புப் பிரதிநிதியை நியமித்தல் போன்றவற்றை கட்டாயமாக உள்ளடக்க பிரிட்டன் அரசிடம் வேண்டுகோள் விடுத்து சாகும் வரை உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தெரிவித்து சர்வதேச சர்வதேச இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் வழக்காடு மையத்தினால் நேற்று ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

லண்டனை தளமாகக் கொண்ட அந்த அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவ்விடயம் தொடர்பாக பிரிட்டன் அரசுக்கு இலங்கையில் இனப்படுகொலையினால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தமது தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்தி கடிதமொன்றை சர்வதேச இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் வழக்காடு மையம் சமர்ப்பித்துள்ளது.

வெளியே கசிந்துள்ள பிரிட்டனினால் ஐ.நாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள திட்ட முன்மொழிவில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைத்தல், சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையினை உருவாக்குதல் குறித்து எதுவித விடயங்களும் உள்ளடக்கப்படாமைக்கும் 500 இற்கு மேற்பட்ட புலம்பெயர் அமைப்புக்களினால் பிரிட்டன் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 'இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் பிரேரணையை பிரிட்டன் கொண்டு வர வேண்டும்'என்ற கோரிக்கைக்கு இது வரை பதிலேதும் அனுப்பாமைக்கும் சர்வதேச சர்வதேச இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் வழக்காடு மையம் தனது அதிருப்தியை அந்தக் கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கை அரசு தமிழ் மக்களிற்கெதிரான இனப்படுகொலையை இன்று வரை தொடர்ந்து வருவதுடன் நினைவுச்சின்னங்களை அழித்தல், சமத்துவத்தை தடை செய்தல் போன்றவற்றுடன் மொழி, வரலாற்றை நீக்குதல் போன்றவற்றினூடாக தமது இனவாதப்போக்கை வெளிப்படுத்தி வருவதுடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1, 34/1மற்றும் 40/1 தீர்மானங்களின் பொறுப்புக்கூறல் செயல்முறையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகியமையும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையின் உச்சக்கட்டத்திலிருந்து உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் கோரிய அதே கோரிக்கையே இதுவெனவும் அதாவது 2015 ஆம் ஆண்டு உலகெங்கிலுமுள்ள 1.5 மில்லியன் மக்கள் கையெழுத்திட்டு சமர்ப்பிக்கப்பட்ட 'இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைக்க வேண்டும்' என்ற மனு மூலமாகவும், 2019 ஆம் ஆண்டு சர்வதேச நீதிபதிகள் ஆணையம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைப்பது 'முழு உத்தரவாதம்' என்று கூறியதன் மூலமும், 2019 ஆம் ஆண்டு ICPPG இனால் பிரித்தானிய பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 'இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துக'என்னும் மனு மூலமும், 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையினை உருவாக்கும் தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவருமாறு 250 புலம்பெயர் தமிழர் அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை மூலமும், 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து முக்கிய தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிய கடிதம் மூலமும் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி 500 இற்கு மேற்பட்ட புலம்பெயர் அமைப்புக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 'இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் பிரேரணையை பிரிட்டன் கொண்டு வரவேண்டும்'என்ற கோரிக்கை மூலமும், இலங்கை இராணுவம், பொலிஸாரின் மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்களிற்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை எழுச்சியுடன் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை'எழுச்சி போராட்டத்தின் மூலமும் மற்றும் ஏனைய ஆதாரங்களின் மூலமாகவும் இலங்கையில் தொடர்ந்து வரும் அரசுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை செயற்படுத்தத் தவறிவிட்டன என்பதற்கு ஆதாரங்களாகும் என மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய தமிழ் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களை பிரித்தானிய அரசிற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பரிந்துரைத்தல் மற்றும் சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையினை உருவாக்குதல் போன்றவற்றை பிரித்தானிய அரசின் தீர்மானத்தில் உள்ளடக்க கோரி சர்வதேச சர்வதேச இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் வழக்காடு மையத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள சாகும் வரையான உணவுத்தவிர்ப்புப் போராட்டத்திற்கு தோள் கொடுக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டத்தை நடத்துகிறார் ஜனாதிபதி கோட்டாபய



கொழும்பு, பெப். 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக ஆளும் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு, ஆளும் கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

நடப்பு அரசியல் நிலவரங்கள் குறித்து இதன்போது, முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ)



# அமெரிக்க தூதுவர் அலைனா யாழ். நூலகத்துக்கு விஜயம்

## மாநகர முதல்வரையும் சந்தித்தார்

யாழ்ப்பாணம், பெப். 25

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி ரெப்லிட்ஸ் அம்மையார் நேற்று புதன்கிழமை யாழ். பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டார்.

இதன்போது நூலகத்தில் வைத்து யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனையும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் யாழ். பொது நூலக பிரதம நூலகர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# சிறுத்தையின் சடலம் மீட்பு!

கொழும்பு, பெப். 25

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் கொட்டகலை எல பொஜின் தேசிய உணவகத்திற்கு முன்னால் உள்ள மேபீல்ட் தேயிலை மலையில் நேற்று சுமார் இரண்டடி நீளமான உயிரிழந்த நிலையில் சிறுத்தை சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்தே சிறுத்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சிறுத்தை விஷ உணவு உட் கொண்டு உயிரிழந்துள்ளதா அல்லது எவரேனும் கொன்றனரா என்பது தொடர்பாக பத்தனை பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# உலக முடிவு மலைப்பகுதியில் கூடாரம் அமைத்து தங்கத் தடை

கொழும்பு, பெப். 25

மடுல்சீமைப் பகுதியின் சிறிய உலக முடிவு மலைப் பகுதியிலும், பதுளை - நாராங்கலைமலை உச்சிப்பகுதிகளிலும் உல்லாசப் பயணிகள் செல்வதற்கும், கூடாரங்கள் அமைத்து தங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழுவின் கூட்டம், பதுளை அரச செயலகத்தில் நடைபெற்றபோதே, மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக இணைப்புக் குழுத் தலைவரும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுதர்சன தெனிபிட்டிய தெரிவித்தார்.

இணைப்புக்குழுத் தலைவர் சுதர்சன தெனிபிட்டிய ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 6 ஆம் திகதி தினுர விஜய சுதந்தர என்ற நபர், சிறிய உலக முடிவைப் பார்க்கச் சென்று, 1200 அடிபள்ளத்தில் விழுந்து பலியானார். இவர் தனது நண்பர்கள் 12 பேருடன் மலை உச்சிக்குசென்று கூடாரம் அமைத்து தங்கியிருந்தனர்.

கடுங்குளிரான காலநிலையினால், அவர்கள் மலை உச்சியில் இருக்கமுடியாமல் கீழிறங்கினர். அவ்வேளையில் 1200 அடி பள்ளத்தாக்கில் தினுர விஜயசுந்தர விழுந்து மரணமானார். இதைத் தொடர்ந்து, எடுக்கப்பட்ட முடிவிற்கமைய உல்லாசப் பயணிகள் எவரும், சிறிய உலக முடிவு மலைப் பகுதியில் கூடா ரங்கள் அமைத்து தங்கியிருப்ப தற்கு பூரண தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்தகைய கூடாரங்கள் அமைத்து உல்லாசப் பயணிகள் தங்குவதால், அப்பகுதியெங்கும் சூழலும் மாசடைகின்றன.

அத்துடன், பதுளை - நாராங்க லை மலைப்பகுதிக்கு உல்லாசப் பயணிகள் செல்வதற்கும், கூடாரங்கள் அமைத்து தங்குவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்நாராங்கலை மலைப் பகுதியில் 64 வகையிலான மரங்கள், 24 வகையிலான செடி, கொடிகள், 22க்கு மேற்பட்ட மூலிகை வகைகள் நிறைந்துகாணப்படுகின்றன.

இந்நிலையில், உல்லாசப் பயணிகளாக, மலையுச்சிக்கு செல்வோர், வனப்பகுதிக்கு சேதம் விளைவிப்பதுடன், அங்குள்ள புனிதமான சூழலை மாசடையவும் செய்கின்றனர். அத்துடன் வரலாற்றுப் பெருமைகொண்ட இம்மலைப் பகுதிகளை பாதுகாக்க வேண்டிய பாரிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது - என்றார்.

# இலங்கையின் இராஜதந்திர சூழ்ச்சிகளால் சந்தர்ப்பத்தை இந்தியா தவறவிடக்கூடாது

## மெய்நிகர் கூட்டத்தில் வலியுறுத்தினார் விக்னேஸ்வரன்



> இலங்கையின் இராஜதந்திர சூழ்ச்சிகளுக்கு இந்தியா ஏமாந்து இந்த பொன்னான சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிடக் கூடாது. கொழும்பு துறைமுக விடயம் சரி, அல் லது வடக்கின் மூன்று தீவுகள் விடயத்தில் சரி இலங்கை அரசாங்கம் இந்தியா சார்பில் மேற்கொள்ளும் விட்டுக் கொடுப்புக்களோ அல்லது இணக்கப்பாடுகளோ தற்காலிக மானவையே அன்றி நிரந்தர மானவை அல்ல என்பதை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.

“இலங்கையின் இராஜதந்திர சூழ்ச்சிகளுக்கு இந்தியா ஏமாந்து இந்த பொன்னான சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிடக் கூடாது. கொழும்பு துறைமுக விடயம் சரி, அல்லது வடக்கின் மூன்று தீவுகள் விடயத்தில் சரி இலங்கை அரசாங்கம் இந்தியா சார்பில் மேற்கொள்ளும் விட்டுக்கொடுப்புக்களோ அல்லது இணக்கப்பாடுகளோ தற்காலிகமானவையே அன்றி நிரந்தரமானவை அல்ல என்பதை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும்.” என்று கோரியிருக்கின்றார் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும்இலங்கைத் தமிழரின் வருங்காலமும் - ஒரு சர்வதேச கண்ணோட்டம்’ என்ற தலைப்பில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மெய்நிகர் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :

“கடந்த 11 வருடங்களாக இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டம் விரும்பியோ விரும்பாமலோ ஐ. நா. மனித உரிமைகள் சபையை மையப்படுத்தியதாகவே இருந்துவந்துள்ளது. இதன் அர்த்தம் மனித உரிமைகள் சபையின் ஊடாக தமக்கு நீதியும் சமாதனமும் கிடைக்கும் என்று தமிழ் மக்கள் முழுமையாக நம்பிக்கை வைத்து செயற்பட்டார்கள் என்பது அல்ல.

இனப்படுகொலையின் உச்சக்கட்டம் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றபின்னர் மிகவும் பலவீனமும் சோர்வும் அடைந்து இருந்த எமக்கு ஐ. நா. மனித உரிமைகள் சபை இலகுவான தெரிவாக தென்பட்டதால் அதனை நாம் இறுக்கமாக பற்றிக்கொண்டுவிட்டோம். சர்வதேச சட்டங்கள், சர்வதேச நீதிப் பொறிமுறைகள், மனித உரிமைக்கோட்பாடுகள், சர்வதேச உறவுகள், புவிசார் அரசியல் ஆகியவற்றை சரியான முறையில் கையாண்டு சந்தர்ப்பங்களை உருவாக்கி அல்லது இருக்கும் சந்தர்ப்பங்களை முறையாக கையாண்டு மனித உரிமைகள் சபைக்கு சமாந்திரமாக வேறு வழிகளில் செல்வதற்கு நாம் பெரியளவில் ஈடுபடவில்லை. இதற்குகாரணம், முற்றுமுழுதாக விடுதலைப்புலிகளின் நிழல் அரசின் இராணுவ மற்றும் அரசியலில் எமது மக்களின் பாதுகாப்பும் நல்வாழ்வும் 2009 வரை தங்கி இருந்தமையே. 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாம் பூஜ்யத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டி இருந்தது. வடக்கு - கிழக்கிலே நாம் சுயாதீனமாக செயற்பட முடியாதளவுக்கு அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. நன்கு கட்டமைக்கப்பட்ட அரசியல் செயற்பாடுகள் எம்மத்தியில் இருக்கவில்லை. சர்வதேச அரசியலும், இராஜதந்திரமும் எமக்கும் புதிதாக இருந்தன.

இதே நிலைமைதான் புலம்பெயர் மக்கள் மத்தியிலும் இருந்தது. கட்டமைப்புக்களையும் செயற்பாடுகளையும் புதிதாக உருவாக்கி செயற்படவேண்டி இருந்தது. நிலத்திலும், புலத்திலும் பல குழப்பங்களும் முரண்பாடுகளும் ஏற்பட்டன. தமிழர் என்ற இனத்தின் நிமிர்த்தமும், தமிழ் என்ற மொழியின் நிமிர்த்தமும் நாம் உலகில் மிகவும் பலமான ஒரு சக்தியாக இருப்பதற்கான எல்லாமே எம்மிடம் இருந்தும் துரதிஷ்டவசமாக வீழ்ந்துகிடந்த எம்மை கைகொடுத்து தூக்கி நிமிர்த்தி தெம்பூட்டும் நிலையில் தமிழகமும் இருக்கவில்லை. எமது புலம்பெயர் சமூகமும் இருக்கவில்லை. ஆதலால், நாம் அநாதரவாக இருந்தோம் என்பதே உண்மையானது.

ஆனால், கடந்த 11 ஆண்டுகளில் நாம் பலவற்றைக் கற்றிருக்கின்றோம். எமது தவறுகளை உணர்ந்து கொண்டிருக்கின்றோம். உலகத்தை புரிந்து கொண்டிருக்கின்றோம். பூகோள அரசியலை புரிந்து கொண்டிருக்கின்றோம். ஐ. நா. மனித உரிமைகள் சபையை புரிந்து கொண்டிருக்கின்றோம். நாம் தெளிவுபட்டு வருகின்றோம். இந்த தெளிவு நிலத்திலும் ஏற்படுகின்றது, புலத்திலும் ஏற்படுகின்றது. ஆகக்குறைந்தது செயற்பாடுகளை மையமாக வைத்தேனும் நிலத்திலும், புலத்திலும் ஒற்றுமை துளிர்விட ஆரம்பித்திருக்கின்றது.

மனித உரிமைகள் சபைத் தீர்மானம் தமிழ் மக்களுக்கான நீதி, மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், தற்போது வெளியாகியுள்ள முதலாவது தீர்மான வரைபு பெரும் ஏமாற்றத்தை எமக்கு அளித்திருக்கின்றது. இதுதொடர்பில் எனது ஏமாற்றத்தையும் கடும் அதிருப்தியையும் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தேன். இந்த வரைபு காரணமாக இலங்கையின் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பு தொடர்பில் நிச்சயம் அற்ற ஒரு சூழ்நிலை உருவாகி இருப்பதுடன் அவர்கள் மத்தியில் தமது பாதுகாப்பு பற்றிய ஒரு அச்சமும் உருவாகி வருகின்றது. இந்த வரைபு அப்படியே நிறைவேற்றப்பட்டால், தமிழ் மக்களின் பாதுகாப்பு பெரும் ஆபத்தான ஒரு நிலைமைக்கு செல்லும். ஏற்கனவே எமக்கு எதிரான செயற்பாடுகள் கழுத்துவரை வந்துவிட்டன.

இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்கள் எதிர்காலத்தில் இடம் பெறுவதற்கான ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணையாளரே குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைவு வலுவாக்கப்படுவதற்கு அல்லது மேலும் வலுவற்றதாக்கப்படுவதற்கு இன்னமும் இரண்டு வாரங்கள் மட்டுமே இருக்கின்றன. இனப்படுகொலை, போர்க்குற்றம் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றம் ஆகியவற்றை விசாரிப்பதற்கு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கு பாரப்படுத்துவதற்கு ஐ. நா. பாதுகாப்பு சபை மற்றும் ஐ. நா. பொதுச்சபை ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் வலியுறுத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளினதும் கோரிக்கையாக இருக்கின்றது. இந்த வலியுறுத்தலை தீர்மானத்தில் கொண்டு வருவதற்கு இந்தியா முக்கிய வகிபாகத்தை மேற்கொள்ள முடியும். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு மட்டுமன்றி சர்வதேச நீதி மன்றத்துக்கும் கொண்டு செல்வதற்கு இந்தியா நடவடிக்கைகளை முன்னின்று செயற்படுத்த வேண்டும் .

தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் வடக்கு -கிழக்கிலே சர்வதேச சமூகத்தினால் பொதுவாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுவதற்கு இந்தியா தலைமை தாங்கி செயற் படுவதானது இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பல அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக் கும். இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத் தும்வகையில் இலங்கையின் வடக்கின் சில கேந் திர முக்கியத்துவம்மிக்க இடங்களை சீனாவுக்கு கொடுப் பதற்கு இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளை நிறுத்து வதற்கும் இந்தியாவின் தென் கோடியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கென உச்சபட்சமான நிரந்தரமான அதி காரக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கும் இந்தியா வுக்கு இருக்கும் ஒரு சந்தர்ப்பமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றமாகும் . அத்துடன் சர்வதேச நீதிமன்றம் மற்றும் பொது வாக்கெடுப்பு ஆகியனவும் எமக்கு பரஸ்பரம் நன்மை கொடுப்பன .

இலங்கையின் இராஜதந்திர சூழ்ச்சிகளுக்கு இந்தியா ஏமாந்து இந்த பொன்னான சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிடக்கூடாது. கொழும்பு துறைமுக விடயம்சரி, அல்லது வடக்கின் மூன்று தீவுகள் விடயத்தில் சரி இலங்கை அரசாங்கம் இந்தியா சார்பில் மேற்கொள்ளும் விட்டுக்கொடுப்புக்களோ அல்லது இணக்கப்பாடுகளோ தற்காலிகமானவையே அன்றி நிரந்தரமானவை அல்ல என்பதை இந்தியா புரிந்துகொள்ளவேண்டும். இந்தியாவின் மத்திய அரசாங்கத்துக்கு இந்த விடயத்தில் பாரிய அழுத்தம்கொடுக்கும் பணியை தமிழ் நாடு செய்யவேண்டும். இதுவெறுமனே ஒரு அரசியல் வலியுறுத்தலாக அன்றி மக்கள் இயக்கத்தின் ஊடாகவும் மேற்கொள்ளப்படவேண்டும். இன்றைய பத்திரிகைகளில் மூன்று தீவுகள் பற்றிய வுநனெநச தமக்கே தரப்பட்டுள்ளதாகவும் மூன்றாம் நபர்கள் எந்தவித குறுக்கீடுகளையும் செய்யப்படாது என்று சீனக்கம்பனியொன்று கேட்டுள்ளது என்ற செய்தி வந்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் இரு பெரும் நாடுகளுக்கிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தினால் பாதிக்கப்படப்போவது இலங்கையின் வடமாகாணமக்களும் இந்தியாவின் தமிழ்நாடுமே. அதனாலத்தான் இன்றைய காலகட்டத்தின் முக்கியத்துவம் பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி, மனித உரிமைகள் சபைக்கு சமாந்திரமாக எமக்கான நீதியையும் சமூக, பொருளாதார, அரசியல் அபிலாஷைகளையும் வென்றெடுக்கும் பல வழிகளை திறந்து செயல்படவேண்டிய காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம். எவ்வாறு சர்வதேச நீதிமன்றத்தை நாடுவது,எவ்வாறு பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்த ஏற்பாடுசெய்வது, எவ்வாறு எமது மக்களை வலுவூட்டுவது, எவ்வாறு responsibility to protect (R2P) கோட்பாட்டை எமக்கு சாதகமாக பயன்படுத்துவது, எவ்வாறு ஆய்வு மற்றும் அறிவியலை பயன்படுத்திக் கொள்வது, எவ்வாறு “தமிழ்” என்ற அடையாளத்தையும் தமிழர் என்ற இனத்தையும் பயன்படுத்திக் கொள்வது என்றெல்லாம் நாம் பல வழிகளிலும் சிந்தித்து செயல்படுவதிலேயே எமது எதிர்காலம் தங்கியுள்ளது.”



# யாழ்.பொது நூலகம் உருவாக காரணமாக இருந்த செல்லப்பா

## 125 ஆவது ஜனன தினக் கட்டுரை



**- விமலன் பாலசுப்ரமணியம்**

கூகுளில் யாழ்ப்பாணம் என்று தட்டினாலே முதலில் தோன்றுவது இந்த யாழ்ப்பாணப் பொது சன நூலகம் தான். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கல்விக் கோவில், ஓங்கி வானளக்கும் கலை பொக்கிஷம், பரோபகாரி கே. எம். செல்லப்பாவின் சிந்தனையாலும், செயலாலும் மற்றும் பலரது அயராத உழைப்பாலும் உருப்பெற்றது. இந்த கலைக்கோவில் சாதி, இன, மத, வேறுபாடின்றி அனைவருக்கும் இரவு பகலாக சேவையாற்றிய, சகலரது அறிவுப் பசியை நீக்கிய இந்த அறிவாலயம் ஒரு பெரும் ஆசானாகவே மக்களுக்கு விளங்கி வருகிறது.

'கற்றவன்பண்டிதனாவான்' என்ற உயர்ந்த சிந்தனையை அனைவருக்கும் விதைத்த மாமனிதர், அறிஞர், பரோபகாரி கே. எம். செல்லப்பா. இவர் தனது சிறு வயது முதல் புத்தகத்தின் மீது தீராத ஆர்வம் கொண்டு எப்பொழுதும் வாசிக்கும் பழக்கத்தினை உடையவர். தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு என்ற திருக்குறளின்படி வாழ்ந்தவர். தன் வீட்டில் பாரம்பரியமாக வைப்பில் உள்ள பல புத்தங்களை தன் நெருங்கிய நண்பர்களுடன் அவ்வப்போது வாசிக்கப் பகிர்ந்து வந்தார். வாசிப்பவர்களின் அறிவு முதிர்ச்சியை கண்டும் அகமகிழ்ந்தார். 1933ஆம் ஆண்டு தனது வீட்டிலேயே ஓர் அறையை ஒதுக்கி அருகில் வசிக்கும் பலரையும் வாசிக்க அழைத்தார், பின்பு வாசிக்க தெரியாதவர்களுக்குத் தானே வாசித்துக் காட்டி அவர்களுக்கு ஆர்வமூட்டினார்.

1934ல் யாழ்ப்பாணத்தில் ஒரு மத்திய இலவச தமிழ் நூலகத்திற்காக ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழில் கோரிக்கை விடுத்தார். மேலும் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், ஆசிரியர்கள், வணிகர்கள் மற்றும் முக்கிய ஓய்வு பெற்றவர்களை அணுகி புத்ததகங்களைச் சேகரித்தார். இதனைப் பலருக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தும் நோக்கில், செல்லப்பா அவர்களும் வேறு சில பிரமுகர்களும் இணைந்து செயல்பட்டு, இந்த நூல் நிலையத்தை யாழ் நகரின் மத்தியில் அமைத்து வழி நடத்தினர்.

இவ்வாறாக மென்மேலும் வளர்ந்த யாழ்ப்பாண நூலகம் 1936இல் யாழ் மாநகர சபையின் முதலாவது முதல்வராகப் பணியாற்றிய சாம்சபாபதி, 1953இல் வண.லோங் அடிகளார் போன்றோரை உள்ளடக்கிய கல்விமான்கள், பிரமுகர்களைக் கொண்ட குழுக்களால் காலத்துக்குக் காலம் பாரிய வளர்ச்சி கண்டு, 1959 ஒக்ரோபர் 11ஆம் திகதி தற்போதய இடத்தில் நிரந்தர, சர்வதேச தரத்திலான கட்டடத் தொகுதி பெற்று யாழ்ப்பாணத்திற்கே பெருமை சேர பணியாற்றத் தொடங்கியது.

இவ்வாறாக புத்தூர் பரோபகாரி கே. எம்.செல்லப்பாவின் சிந்தனையில் உதித்து செயல்வடிவம் பெற்று மெல்ல வளரத் தொடங்கிய யாழ். பொது நூலகம். இவரின் காலகட்டத்தில் கிட்டத்தட்ட 97,000 புத்தகங்களுடன், அசல் பனை ஓலைகள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித்தாள்கள் மற்றும் பல்வேறு மொழிப்பத்திரிகை கள் இந்த யாழ்ப்பாண பொது நூலகத் தில் சேகரிக்கப்பட்டு வைப்பில் இருந்தன. தென்கிழக்காசியாவிலேயே குறிப்பிடத் தக்க கலைக்கோவிலாக இலங்கைக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கே பெருமை சேர்ப்பதாக ஒரு காலத்தில் விளங்கியது யாழ்ப்பாணப் பொதுசன நூலகம். இன்று யாழ் மண்ணில் ஓங்கி உயர்ந்து தமிழனின் பெருமையை பேசுகிறது.

யாழ்.வரலாறில் அழிக்க முடியாத மண்ணின் மாமனிதர், பெரியகோட்டு சக்கடத்தாராக இருந்து இளைப்பாறியவர் மேற்குறிப்பிடப்பட்ட பரோபகாரி கனகசபை முதலிதம்பியார் செல்லப்பா ஆவார். 'கற்றவன் பண்டிதனாவன்' என்ற உயர்ந்த சிந்தனையை அனைவருக்கும் விதைத்த மாமனிதர் கே.எம்.செல்லப்பா. இவர் 24.04.1958இல் மரணமடைந்ததை ஒட்டி 25.04.1958இல் யாழ்.மாநகர சபை யில் மேற்கொள்ளப்பட்ட அஞ்சலி தீர் மானத்தின்படி அப்போதைய மேயர் பொ.காசிப்பிள்ளையினால் குடும்பத்தவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் 'முதன் முதலில் யாழ்ப்பாண மத்திய நூல் நிலை யத்தை ஆரம்பித்து நடத்தியவரும் பின் அதனை இம் மாநகரசபையிடம் ஒப் படைத்தவருமான அமரர். மதிப்புமிகு கே.எம்.செல்லப்பாவின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கின்றோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலகத்தில் கல்வி பயின்ற பலரும் இன்று உலகளவில் உயர்ந்த நிலையில் மருத்துவம், விஞ்ஞானம் வியாபாரம் போன்ற பலதுறைகளில் பட்டதாரிகளாகவும் மதிப்பு மிக்க கல்விமான்களாகவும் இருக்கின்றனர்.

**கே.எம்.செல்லப்பாவின் (24.02.2021) 125வது பிறந்தநாளில் அவரின் பொது சேவையை அகமகிழ்ந்து தமிழ் மக்கள் அனைவரும் நன்றியோடு நினைவுகொள்வோம்.**

# யுத்தத்தில் காணாமல் போன உறவுகள் வடக்கில் வலுப்பெறும் போராட்டம்

**ரஞ்சன் அருண் பிரசாத்**



இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து, 11 வருடங்கள் கடந்துள்ள போதிலும், தமக்கான நீதியை கோரி இன்றும் தமிழர்கள் போராட்டங்களை தொடர்ந்து வருகின்றனர். உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேச அளவில் இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் அமர்வுகள் தற்போது ஜெனீவாவில் தொடங்கியிருக்கிறது. இந்த நிலையில், இலங்கைக்கு எதிராக கடும் தீர்மானங்கள் கொண்டு வர மனித உரிமை அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த சமயத்தில் இலங்கையின் வடக்குப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது நியாயத்திற்கான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த போராட்டங்கள் நடைபெறும் களத்தை பிபிசி தமிழ் பார்வையிட்டது.

இலங்கையின் வட மாகாணத்தில் வவுனியா நகர் மத்தியில் 1,467ஆவது நாளாகவும் சூழற்சி முறையிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யுத்த காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடித்துத் தருமாறு வலியுறுத்தியே இந்த போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாக அதில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை, மீண்டும் தம்மிடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி, அவர்களின் உறவினர்கள், வவுனியாவில் போராட்டத்தை முன்னெடுப்பதாக தமிழர் தாயகம் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா, பிபிசி தமிழிடம் தெரிவித்தார்.

தனது கோரிக்கைக்கான தீர்வு உள்நாட்டு அரசாங்கத்திடமிருந்து கிடைக்காது எனவும், சர்வதேச நாடுகளிடமிருந்தே தமக்கான நீதி கிடைக்கும் எனவும் காசிப்பிள்ளை ஜெயவனிதா குறிப்பிடுகிறார்.

தமக்கான நீதி கிடைக்கும் வரை இந்த போராட்டத்தை தாம் கைவிட போவதில்லை என்றும் அவர் கூறினார்.

தனது பிள்ளையை முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து, பிடித்துக்கொண்டு சென்றதாகவும், ஐந்து வருடங்களாகத் தேடியும் தனக்கு பிள்ளை கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட நிகழ்வொன்றில் தனது மகளை தான் கண்டதாகவும், ஆதாரத்தை காண்பித்து மகளை மீட்க முயற்சித்த போதிலும், அந்த முயற்சி இதுவரை வெற்றியளிக்கவில்லை எனவும் அவர் கூ.றினார்

தாம் போராட்டங்களை முன்னெடுத்து வருவதால், தன்னிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக ஜெயவனிதா தெரிவித்தார்.

இந்த போராட்டத்தில் 280 பேர் ஆரம்பத்தில் கலந்து கொண்டனர். ஆனால், பல்வேறு அச்சுறுத்தல்கள், பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்னைகளால் தற்போது 64 பேர் மட்டுமே போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மற்றுமொரு தாயான அரியரத்னம் அன்னலட்சுமி கண்ணீருடன் பிபிசி தமிழிடம் பேசினார்.

தனது மூத்த மகன் 1990ஆம் ஆண்டு ஓமந்தையில் வைத்து கடத்தப்பட்டதாகவும், தனது 2வது மகன் 2008ஆம் ஆண்டு வீரப்புரம் பகுதியில் கடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகனை தேடி தம்மால் நடத்தப்படும் போராட்டத்திற்கு உள்நாட்டு அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தீர்வை வழங்காது என கூறிய அவர், வெளிநாடுகளே தமக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தனது கணவன், தனது மகன்கள் காணாமல் போன சோகத்திலேயே உயிரை விட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தனது மகனை தேடித் தருமாறு சுமார் 21 வருட போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார்களில் ஒருவரான தாமோதரம்பிள்ளை பேரின்பநாயகி, பிப்ரவரி 22ஆம் திகதி காலமானார்.

வவுனியாவில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் போராட்ட களத்தில் பேரின்பநாயகி என்பவர் ஆரம்பம் முதல் போராடி வருகிறார்.

தனது மகன் கிடைப்பார் என்ற எதிர்பார்ப்புடன் போராட்டத்தில் ஈடுபட்ட பேரின்பநாயகியின் ஆசை இறுதி நொடி வரை நிறைவேறவில்லை என்று அவர் வேதனை தெரிவித்தார்.

பேரின்பநாயகியின் மகனான தாமோதரம்பிள்ளை தர்மகுலநாதன், 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி பாதுகாப்பு பிரிவினர் அழைத்து சென்ற நிலையில், அவர் காணாமல் போயிருந்ததாக அவரது சகோதரர்கள் தெரிவித்தனர்.

வவுனியா - கோழிக்கூட்டு முகாமில் இருந்த நிலையிலேயே தாமோதரம்பிள்ளை தர்மகுலநாதன், காணாமல் போயுள்ளார்.

அன்று முதல் பேரின்பநாயகி இந்த உலகை விட்டு விடை பெறும் தருணம் வரை, தனது மூத்த மகனை தேடி போராடி வந்து, தோல்வி அடைந்துள்ளார்.

**பி.பி.சி.**

# இயேசுவின் நீதிமன்றில் மன்னிப்பே கிடையாது

## கர்தினால் மீது ஞானசார தேரர் காட்டம்

கொழும்பு,பெப்.25

இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் நாம் எச்சரித்த போது அமைதியாக இருந்தவர்களுக்கு ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவையில்லை. அளுத்கம தாக்குதல் நடைபெற்றபோதே விசேட ஆணைக்குழுவொன்றின் ஊடாக விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினோம். எனினும் அதனைச் செய்யவில்லை. எனவே, அதன் பின்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களும், பொறுப்புக்கூறவேண்டும் என பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் நோக்கில் பொதுபலசேனா மற்றும் சிங்கள ராவய ஆகிய அமைப்புக்கள் இணைந்து நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தன. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில், நாட்டில் இயங்கும் தேசிய அமைப்புக்கள் மற்றும் இயக்கங்கள் தாக்குதலுக்கான தூண்டுதல் காரணியாக அமைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. பொதுபலசேனா போன்ற அமைப்புக்கள் தடைசெய்யப்பட வேண்டும் என அதன் பரிந்துரைகளில் கூறப்பட்டிருப்பதாகவும் ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் விசாரணை அறிக்கையை வெளியிடுமாறும், இல்லாவிட்டால் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் கூறி கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்கு முன்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை போராட்டங்களை முன்னெடுக்கின்றார். சில வருடங்களுக்கு முன்னர் நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் உருவாகிவருவது பற்றி நாம் எச்சரித்திருந்தோம். அப்போதே இதுகுறித்து கர்தினால் அழுத்தங்களை கொடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் ஏற்படாமல் தடுத்திருக்கலாம். ஆனால், அப்போது கர்தினால் இனநல்லிணக்கம், ஒற்றுமை, மனித உரிமைகள் என்பன தொடர்பிலேயே பேசினார் - என்றார். (எ)



# குருந்தூர்மலை குளத்தில் மீன்பிடிக்க கிராம மக்களுக்கு இராணுவம் தடை

முல்லைத்தீவு,பெப்.25

**முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைப் பகுதியில் அமைந்துள்ள குருந்தூர் குளத்தில் தூண்டில் போட்டு மீன்பிடிக்கச் சென்ற உள்ளூர் கிராம மக்களுக்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளதோடு, மீன் பிடித்த ஆறுமுகத்தான்குளத்தைச் சேர்ந்த கிராமவாசிகளை தடிகளைக் கொண்டு மிரட்டி அனுப்பியுள்ளனர்.**

இந்த குருந்தூர் குளத்துக்கு அண்மையாகவுள்ள குருந்தூர் மலையில் தொல்லியல் ஆய்வுகளை இராணுவமும், தொல்லியல் திணைக்களமும் இணைந்து மேற்கொண்டுவரும் நிலையில், அப்பகுதியில் காவலரண் அமைத்து தங்கியுள்ள படையினர் வலைகளைக் கொண்டும் தூண்டில் போட்டும் குளத்தில் ஜப்பான் மீன்களை தாம் பிடித்து உண்டுவரும் நிலையில், வாழ்வாதாரத்துக்காக தூண்டில் போட்டு மீன்பிடிக்கச் செல்லும் தம்மை அச்சுறுத்துவதாக கிராம வாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றவர்களை அங்கு காவல் கடமையில் நின்ற இராணுவத்தினரின் ஏவலில் அவர்களோடு நின்ற பொலிஸார் இரண்டு பேர் மீன் பிடிக்கத் தடை செய்துள்ளனர். இதன்போது தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை குளத்தில் கட்டி மீன்பிடிக்கும் நடவடிக்கையில் இனம் தெரியாதவர்கள் ஈடுபட்டிருந்தனர் எனவும் சட்டவிரோதமான அந்த நடவடிக்கையை தடுக்காத பொலிஸார் தூண்டில் போட்டு மீன்பிடிக்க வந்த தம்மை மிரட்டி தடை செய்ததாக கிராம வாசிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இராணுவம் வலைகளைப் பயன்படுத்தி இதே குளத்தில் மீன் பிடித்து உண்ண முடியும் என்றால் இதே கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாழும் தாம் ஏன் மீன் பிடிக்கத் தடைவிதிக்கப் படுவதாக ஆறுமுகத்தான்குள மீனவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, இந்தக் குளம் அமைந்துள்ள பகுதிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை குளப் பகுதிக்குச் செல்ல முடியாது என இராணுவத்தினர் தடைவிதித்ததோடு அனுமதி பெற்றுவந்தால் தான் குளத்துக்கு செல்லலாம் என திருப்பி அனுப்பியுள்ளனர். (எ)



## ஒரு லட்சம் வேலைவாய்ப்பு

# காதார சேவைகள் திணைக்களத்தில் யாரும் உள்வாங்கப்பட மாட்டார்கள்

கொழும்பு,பெப்.25

ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் பெற்றுள்ளவர்கள் நிரந்தர ஊழியர்களாக சுகாதார சேவையில் உள்வாங்கப்படவுள்ளனர் என பரவிவரும் தகவல் முற்றிலும் தவறானது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது இவ்வாறானதொரு கருத்து சுகாதார ஊழியர்களுக்கு மத்தியில் பரவிவருவதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்த வேலையில் அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் மிகக் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி அவர்களை வறுமையிலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முறையான கல்வி அல்லது தொழில்முறை தகுதிகள் அல்லது திறன்கள் இல்லாதவர்கள் மட்டுமே இத்திட்டத்துக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களில் தொழிலாளர்கள், துப்புரவு பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் இயந்திர இயக்குநர்களாக பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சிக்குப் பின்னர், அவர்களுக்கு அந்தந்த நிறுவனங்களில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும். இருப்பினும், அவர்கள் சுகாதார சேவையில் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். (எ)

# எம்.பிக்களின் கல்வித்தகைமையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும்

## ஹரீன் பெர்னாண்டோ கோரிக்கை



கொழும்பு,பெப்.25

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கல்வித் தகைமையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும், சபாநாயகர் சகலரதும் கல்வித்தகைமையை சபைக்கு அறிவிக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஈஸ்டர் தாக்குதல் குறித்த அறிக்கை சபைப்படுத்தப்படுவதன் தாமதம் தொடர்பில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில், ஒழுங்குப் பிரச்னை எழுப்பிய ஹரீன் பெர்னாண்டோ, ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை ஆராய நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் குழு நம்பிக்கையில்லாத ஒன்றாகவும், சாதாரண தரத்தில் சித்தியடையாத நபர்கள் இந்தக் குழுவில் உள்ளனர் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த பாராளுமன்றத்தில் உள்ள சகலரதும் கல்வித் தகைமை என்ன? என்பதை சபாநாயகர் இந்தச் சபைக்கு அறிவிக்க வேண்டும்.

அனைத்து உறுப்பினர்களும் கல்வித் தகைமை என்ன? என்பதை சபைக்குத் தெரிவியுங்கள். அப்போது இந்தச் சபையில் சாதாரண தர தகுதி இல்லாதவர்கள் யார்? என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள்- என்றார். (எ)

# பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் பௌத்த பாதை அமைக்கின்றது பாகிஸ்தான்

## இம்ரான் கான் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.25

**பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் பௌத்த பாதை ஒன்றை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் எமது நாட்டுக்கு வருகை தர முடியும். இதற்கான முதல் அழைப்பை நான் இலங்கைப் பிரதமருக்கு விடுக்கின்றேன் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார்.**

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன் பின்னர் இணை ஊடக சந்திப்பொன்றை நடத்திய நிலையில் அதில் உரையாற்றும் போதே இம்ரான்கான் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நான் இலங்கைக்கு புதியவனல்ல. நான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவுடனேயே ஒரு கிரிக்கெட் வீரனாக இலங்கைக்கு வந்தேன். நான் எனது கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்திருந்த போது இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்திருந்தார்.

அன்றிலிருந்து இலங்கை தொடர்பான சிறந்த நினைவுகளை நான் கொண்டிருக்கிறேன். டெஸ்ட் அந்தஸ்தற்ற நிலையிலிருந்து உலகக் கிண்ணத்தை வென்றது வரை இலங்கை கிரிக்கெட் அணி வளர்ச்சியடைந்து வந்ததை நாம் பார்த்திருக்கிறோம்.

உலகக் கிண்ணத்தைக் கூட இலங்கை அணி பாகிஸ்தானில் வைத்தே வென்றது. நானும் எனது கிரிக்கெட் அணியினரும் இலங்கை கிரிக்கெட் அணியின் பரிணாம வளர்ச்சியை கண்டிருக்கிறோம்.

எமது துணைக்கண்டத்தைச் சேர்ந்த நாடு என்ற வகையில் இலங்கை அணி ஓர் உலகத்தரம் வாய்ந்த அணியாக வளர்ச்சியடைந்ததைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம்.

இந்த விஜயம் வரைக்குமான இலங்கையுடனான எனது உறவை நினைவூட்டவே இந்த விடயங்களை இங்கு குறிப்பிடுகின்றேன்.

இந்த விஜயம் இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும். எமது வியாபார உறவை வலுப்படுத்துவதை இலக்காக கொண்டது.

பாகிஸ்தான் சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தின் ஓர் அங்கமாக உள்ளது. சீன - பாகிஸ்தான் பொருளாதார நடைபாதை வேலைத்திட்டமும் முதன்மையானதாகும்.

நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் மிக முக்கியமானதாகும். எனவேதான் நான் எனது தூதுக்குழுவிடம் இலங்கைக்கு பாகிஸ்தானுக்கு இடையிலான தொடர்புகளை மேலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறியுமாறு கேட்டிருக்கிறேன்.

சீன - பாகிஸ்தான் பொருளாதார நடைபாதை வேலைத்திட்டமானது மத்திய ஆசியாவுக்கும் இலங்கைக்கும் முக்கியமானதாகும்.

எமது வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைக் குறித்தும் நாம் பேசியிருக்கிறோம். எதிர்காலத்தில் மத்திய ஆசியாவுடனான பாகிஸ்தானின் தொடர்பு மூலம் மேலும் இலங்கை எவ்வாறு பயனடையலாம் என்பது பற்றி நாம் ஆராய்ந்திருக்கிறோம். எமது வர்த்தக உறவுகள் மூலம் இரு நாடுகளும் மேலும் ஒன்றுபட முடியும். மேலும் நெருக்கமடைய முடியும்.

இறுதியாக, நான் இலங்கைப் பிரதமரை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கிறேன். உலகிலேயே மிகப் பெரிய பௌத்த புராதன சின்னங்களை பாகிஸ்தான் கொண்டுள்ளது.

40 அடி நீளமான உறங்கும் புத்தர் எனும் உலகிலேயே மிகப் பெரிய பௌத்த புராதன சின்னத்தை நாம் அண்மையில் கண்டுபிடித்துள்ளோம். வடக்கு பாகிஸ்தான், கந்தாரா நாகரிகத்தின் மிக முக்கிய தளமாகும்.

இவற்றை பார்வையிட பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு இலங்கை மக்களை நான் அழைக்கிறேன். நாம் இப்போது பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் பௌத்த பாதை ஒன்றை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் எமது நாட்டுக்கு வருகை தர முடியும். இதற்கான முதல் அழைப்பை நான் இலங்கைப் பிரதமருக்கு விடுக்கிறேன் - எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)



# கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## சுதர்ஷினி சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.25

புதிதாக அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என கொரோனா ஒழிப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த 3, 4 நாள்களாக நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி இறுதி மற்றும் பெப்ரவரி மாதங்களின் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 6.5 வீதமானோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டபோதும் தற்போது அந்த எண்ணிக்கை 4 அல்லது 4.5 வீதமாக குறைவடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில நாள்களில் கொழும்பு மாவட்டம் மற்றும் கொழும்பு நகரில் பெருமளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர், எனினும் தற்போது அந்த நிலைமையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தற்போது மக்கள் பொறுப்புடன் செயல்படுவதால், நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் ஜெனிவா முயற்சிகள் வெற்றி பெறாது

## பொதுஜன பெரமுன அதீத நம்பிக்கை

கொழும்பு,பெப்.25

யுத்தம் முடிவடைந்த பின்னரே தமிழ் மக்கள் முன்னேற்றமடைந்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்களைப் பகடைக்காயாக் கொண்டு யுத்த களத்தில் போராடினார்கள். எனவே, இலங்கையை ஜெனிவாவில் நெருக்கடிக்குள்ளாக்க புலம்பெயர் அமைப்புக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் முன்னெடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது என பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன தெனுபிடிய தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

30 வருட கால யுத்தம் அனைத்து இன மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகள் அமைப்பு இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்களைப் பகடைக்காயாகக் கொண்டு யுத்தத்தில் ஈடுபட்டது. தமிழ் மக்களைப் பாதுகாக்க இராணுவத்தினர் சிறந்த முறையில் செயல்பட்டனர் என்பதை ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி என்ற அனுபவத்தில் குறிப்பிட முடியும்.

யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு காணப்பட்டது. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரே அனைத்து இன மக்களும் நல்லிணக்கத்துடன் வாழ முற்பட்டார்கள்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரே மேம்படுத்தப்பட்டது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததன் பயனை தமிழ் மக்கள் முழுமையாகப் பெற்றுள்ளனர்.

நாட்டுக்கு எதிரானவர்களே இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணைகளை ஆரம்பத்தில் கொண்டு வந்தனர். இலங்கை இராணுவத்தினரை நெருக்கடிக்குள்ளாக்க புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் முன்னெடுத்த முயற்சிக்கு கடந்த அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கியது.

ஜெனிவாவில் இலங்கையை இம்முறையும் நெருக்கடிக்குள்ளாக்க புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், தமிழர் அமைப்புக்களும் பெரும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளன. இவர்களின் குறுகிய நோக்கம் ஒருபோதும் வெற்றிபெறாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் தனித்து இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை எடுக்க முடியாது. பாதுகாப்புச்சபையில் சீனா, ரஷ்யா ஆகிய பலமிக்க நாடுகள் இலங்கைக்கு சார்பாகவே செயல்படும்- என்றார். (எ)

# மரண அறிவித்தல்

மலர்வு 15 - 08 - 1961



உதிர்வு 23 - 02 - 2021

## திரு.அல்போன்ஸ் மரிய செல்வம்

நவாலி தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.அல்போன்ஸ் மரிய செல்வம் 23.02.2021 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் – புனிதமலர் தம்பதிகளின் அன்பு மகனும், பப்ரிசன், கமலம், பாக்கியம், றோஸ், பெனட் (ஆசிரியர்– இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), கொறற்றி (ஆசிரியர் – தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாசாலை, சாள்ஸ் (CLS – Engineering), காலம் சென்றவர்களான மரிய பவளம், பெல்டானோ ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தவச் செல்வநாயகி, ஜெயசீலன், சிவசெல்வநாதன், ஜெயக்குமார், கலஸ்ரீன், அன்ரன், லிசா ஆகியோரின் மைத்துனரும், டென்சில் (சுதாசினி), ஷாம், டிலோஷன், டெனி, பிரான்கிளின், பிளேமிங், ஏஞ்சலா, ஜோர்ச் ஆகியேரின் பாசமிகு மாமனாரும் மற்றும் எனோச், எமில்டன், றொசாளினி, றொசாறியோ ஆகியோரின் பெரிய தந்தையும், டஸ்வின், மொறிஷா, சேஜிற் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (25.02.2021 வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் புனித சென்பீற்றர் தேவாலயத்தில் இடம்பெறும். இரங்கல் திருப்பலியின் பின் புனித சென்பீற்றர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு: 0779787979, 0779974662**

# சீனா - அமெரிக்கா மோதல் வலுக்கிறது

## குவாட் நாடுகளை கூட்டினார் பைடன்


வாஷிங்டன், பெப். 25

அண்மை நாட்களாக சீனா தனது இராணுவ பலத்தை அதிகரித்து வருகின்றது. இதிலிருந்து குவாட் நாடுகள் தங்களை தற்காத்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

சீனா, கடந்த சில ஆண்டுகளாக அயல் நாடுகளுடனும், ஐரோப்பிய நாடுகளுடனும்கூட தொடர் மோதலில் ஈடுபட்டு வருகின்றது. இந்த நிலையில், அமெரிக்கா குவாட் நாடுகளின் கூட்டத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்திருந்தார்.

இதில் பேசிய விடயங்கள் தொடர்பில் அமெரிக்க செய்தி தொடர்பாளர் நெற் பிரைஸ் கூறுகையில்,

"இந்தோ - பசுபிக் பகுதியில் பொருளாதாரம், வர்த்தகம், இராணுவ பலம் ஆகியவற்றை



அதிகரிக்க வேண்டும். இதற்கு ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் பங்கு அத்தியாவசியமானது. சீனாவின் பொருளாதார ஒத்துழையாமை, கருத்துப் பரிமாற்றம் இன்மை, வெளிப்படைத்தன்மை இல்லாமல் செயல்படுவது, சர்வதேச ஒப்பந்தங்களை மீறுவது உள்ளிட்ட செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே குவாட் நாடுகள் இணைந்து செயல்படவேண்டும்- என்றார். (ஐ)



## மியன்மார் மக்களுக்கு வழங்கும் ஆதரவிலிருந்து பின்வாங்கோம்

### அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 25

மியன்மார் மக்களுக்கு நாங்கள் அளிக்கும் ஆதரவிலிருந்து பின்வாங்க மாட்டோம் என்று அந்நாட்டு இராணுவத்துக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளங்கன் கூறுகையில்,

"நாங்கள் மியன்மார் மீது கூடுதலான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்க மாட்டோம். மியன்மார் மக்களுக்கு நாங்கள் அளிக்கும் ஆதரவிலிருந்து பின் வாங்க மாட்டோம். மியன்மார் போராட்டத்தில் கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மீதான தாக்குதலை நிறுத்துங்கள். ஜனநாயக அரசை மீண்டும் கொண்டு வாருங்கள்" என்றார்.

மேலும், மியன்மார் இராணுவத்தை சேர்ந்த இருவர் மீது அமெரிக்கா பொருளாதார தடையை விதித்துள்ளது.

இதனிடையே, மியன்மாரில் இராணுவத்திற்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன. அதே சமயம் போராட்டக்காரர்கள் மீது இராணுவமும் தாக்குதல்களை கட்டவிழ்த்து தொடர்ந்து வருகின்றது.

இராணுவத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிரான்ஸ், சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.(ஐ)

## இந்தியாவுக்கு செல்கிறார் சீன ஜனாதிபதி ஜின்பிங்!

பீஜிங், பெப். 25

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இந்த ஆண்டு இந்தியா செல்வார் என்று கூறப்படுகின்றது.

"பிரிக்ஸ்" என்று அழைக்கப்படும் பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளின் கூட்டமைப்பின் மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அவர் இந்தியா செல்லவுள்ளார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் மாநாடு இந்த ஆண்டு இந்தியாவில் நடத்த சீனா முழு ஆதரவு அளித்தது. இந்நிலையில் இன்னமும் திகதி குறிப்பிடப்படாத அந்த மாநாட்டில் சீன ஜனாதிபதி பங்கேற்பார் என்று கூறப்படுகின்றது.

இந்தியா - சீனா இடையே எல்லைப் பிரச்னை நீடித்து வருகின்றது. இருந்தாலும் இது பிரிக்ஸ் கூட்டமைப்பின் மாநாட்டை பாதிக்காது என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சின் செய்தி தொடர்பாளர் வாங் வென்பின் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே, இந்த மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இந்தியா செல்வார் என்று கூறப்படுகின்றது.

## 200 கோடி தடுப்பு மருந்துகள் இந்த ஆண்டில் உற்பத்தியாகும்

### பைசர் நிறுவனம் அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 25

இந்த ஆண்டில் 200 கோடி தடுப்பு மருந்துகளை தயாரிக்கவுள்ளதாக பைசர் நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், மார்ச் நடுப்பகுதியிலிருந்து, வாரத் துக்கு 1.3 கோடிக்கும் அதிகமான கொரோனா தடுப்பு மருந்துகள் அமெரிக்காவுக்கு வழங்கப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பைஸர் நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

"மார்ச் நடுப்பகுதியிலிருந்து வாரத்திற்கு சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான கரோனா தடுப்பு மருந்துகளை அமெரிக்காவுக்கு அனுப்பவுள்ளோம். அமெரிக்காவுக்கு இதுவரை 4 கோடி கொரோனா தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2021ஆம் ஆண்டில் 200 கோடி கொரோனா தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்ய இருக்கிறோம் என்று பைஸர் மருந்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு எதிராக அதிக எதிர்வினையாற்றும் தன்மை கொண்ட காரணத்தால் பைஸர் கரோனா தடுப்பு மருந்து பல்வேறு நாடுகளில் பயன்பாட்டில் உள்ளன. அமெரிக்காவில் இதுவரை கொரோனாவுக்கு 5 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கரோனா தொற்றால் பலியாகியுள்ளனர். 2 கோடிக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(அ)



## 54 வயது பாகிஸ்தான் எம்.பி. 14 வயது சிறுமியை மணந்தார்

### வலுக்கிறது எதிர்ப்பு

இஸ்லாமாபாத்,பெப். 25

பாகிஸ்தானில் ஜாமியத் உலமா - இ - இஸ்லாம் கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மௌலானா சலாவுதீன் அயுபீ (வயது 54) என்பவர், 14 வயதேயான சிறுமியைத் திருமணம் செய்துள்ளார். இதற்கு எதிர்ப்பு வலுத்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தானின் டான் பத்திரிகை வெளியிட்ட செய்தியில்,

"பலுகிஸ்தான் மாகாணத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானவர் மௌலானா. இவர் ஜூகுர் பள்ளத்தாக்கைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்துள்ளார்.

இது தொடர்பில் கித்ரல் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட சிறுமி பள்ளியில் பயின்று வருவதால், அவர் திருமணம் செய்துகொள்ளும் வயதை அடையவில்லை. எனவே, மௌலானாவின் திருமணம் செல்லாது என்று மகளிர் அமைப்புகள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் மௌலானாவின் திருமணம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டு குறித்து மௌலானாவின் தரப்பில் எந்தப் பதிலும் அளிக்கப்படவில்லை. பாகிஸ்தானில் 16 வயதுக்கும் குறைவான பெண்களை மணப்பது சட்டப்படி குற்றமாகும்.

(ஐ)

## தான் கருவுற்ற செய்தியை கணவருக்கு அதிர்ஷ்ட சீட்டு மூலம் கூறிய பெண்!

நியூயோர்க், பெப். 25

அமெரிக்காவின் அரிசோனா பகுதியை சேர்ந்த பெண் ஹைலிபேஸ் 'டிக்டாக்' மூலம் பிரபலமானவர். இவருக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தை உள்ளது. தற்போது மீண்டும் கருவுற்றுள்ளார்.

இந்த தகவலை ஹைலி தனது கணவரிடம் தெரிவிக்க விநோத முறையை பின்பற்றினார். அதற்கு தனது கணவரின் மகிழ்ச்சி எவ்வாறு இருக்கும் என்பதை அறிய கருவுற்ற தகவலை காணொலியாக பதிவு செய்தார். இதை 'யூடியூப்' மற்றும் 'டிக்டாக்' பக்கத்தில் பகிர்ந்தார். இது இணையதளத்தில் வைரலாகியுள்ளது.

இந்தக் காணொலி 6 நிமிடங்கள் ஓடுகிறது. அதில் தான் கருவுற்ற செய்தியை தனது கணவர் நிக்கிடம் இன்ப அதிர்ச்சியாக தெரிவிக்கும் வகையில் பதிவு செய்துள்ளார். இதற்கு அவர் ஒரு அட்டையில் அதிர்ஷ்ட லாப சீட்டை பயன்படுத்தி இருக்கிறார். அந்த சீட்டை தனது கணவரிடம் கொடுத்து அதில் என்ன பரிசு கிடைத்து இருக்கிறது என்பதை பார்க்கச் சொல்கிறார்.

அதன்படி அவரது கணவர் அந்த அதிர்ஷ்ட சீட்டை சுரண்டி பார்க்கிறார். அதில் 'பேபி' என்று எழுதப்பட்டு இருக்கிறது. அதை பார்த்து குழம்பினார்.

தொடர்ந்து புன்னகை செய்யும் மனைவியை கண்டு உண்மையை புரிந்து கொள்ளும் அவரது கணவர் ஆனந்த குரல் எழுப்பி தனது கருவுற்ற மனைவியை கட்டித் தழுவி தூக்குகிறார். இந்தக் காணொலி யூ-ரியூப்பில் 70 ஆயிரம் பேரும், டிக்டாக்கில் கோடிக் கணக்கானோரும் பார்த்துள்ளனர். (ஐ)

# 100ஆவது டெஸ்டில் களமிறங்கினார் இஷாந்த்

அஹமதாபாத், பெப். 25

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா நேற்று தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கினார்.

அஹமதாபாத் மைதானத்தில் இறங்கியபோது இரு வரிசையாக நின்று இந்திய வீரர்கள் கௌரவ வரவேற்பு அளித்தனர்.

இஷாந்த் சர்மா 2008 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பெர்த்தில் நடந்த டெஸ்டில் முதன்முதலாகக் களமிறங்கினார்.

அப்போது 19 வயதே ஆன இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான றிக்கி பொண்டிங்கை திணறடித்து அவரின் விக்கெட்டை முதல் விக்கெட்டாக வீழ்த்தினார்.

கடந்த 99 டெஸ்ட் போட்டிகளில் இஷாந்த் சர்மா, 302 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். 80 ஒருநாள், 14 இருபது - 20 போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார். 19 வயதில் சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமானதால் அவரால் 32 வயதுக்குள் 100 டெஸ்டுகளில் விளையாட வாய்ப்புக் கிடைத்துள்ளது.




இந்தியாவின் கபில் தேவுக்கு அடுத்ததாக 100ஆவது டெஸ்டை விளையாடும் 2ஆவது இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார். உலகளவில் 12ஆவது வேகப்பந்து வீச்சாளர்.

100 டெஸ்ட்களில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர்களின் விவரம் வருமாறு:

கலிஸ் - 166 டெஸ்ட்கள் - 292 விக்கெட்கள், அண்டர்சன் - 158 டெஸ்ட்கள் - 611 விக்கெட்கள், பிரொட் - 145 டெஸ்ட்கள் - 517 விக்கெட்கள், வோல்ஷ் - 132 டெஸ்ட்கள் - 519 விக்கெட்கள், கபில் தேவ் - 131 டெஸ்ட்கள் - 434 விக்கெட்கள், மெக்ராத் - 124 டெஸ்ட்கள் - 563 விக்கெட்கள், சமிந்த வாஸ் - 111 டெஸ்ட்கள் - 355 விக்கெட்கள், பொலாக் - 108 விக்கெட்கள் - 421 விக்கெட்கள், வசீம் அக்ரம் - 104 டெஸ்ட்கள் - 414 விக்கெட்கள், இயன் பொத்தம் - 102 டெஸ்ட்கள் - 383 விக்கெட்கள், எண்டினி - 101 டெஸ்ட்கள் - 390 விக்கெட்கள், இஷாந்த் சர்மா - 100 டெஸ்ட்கள் - 302 விக்கெட்கள். (ஐ)




## தரங்கவின் திறமைகளால் எமக்கு வெற்றிகள் கிட்டின

### இலங்கை கிரிக்கெட் சபை புகழாரம்

கொழும்பு, பெப். 25

உபுல் தரங்க தனது தொழில் வாழ்க்கையில் இலங்கை கிரிக்கெட்டுக்கு சிறந்த சேவை செய்துள்ளார். அவரின் திறமைகள் பல தேசிய அணி வெற்றிகளுக்கு பங்களித்தன என்று இலங்கை கிரிக்கெட்டின் தலைமை நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.


இலங்கை ஒருநாள் அணியின் தலைவராக இருந்த தொடக்க ஆட்டக்காரர் உபுல் தரங்க சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இலங்கை கிரிக்கெட்டுக்கு எழுதிய கடிதத்தில் தரங்கா தனது ஓய்வை அறிவித்து, தனது 15 ஆண்டுகால சர்வதேச வாழ்க்கையில் தனது ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுக்காக இலங்கை கிரிக்கெட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், இலங்கை கிரிக்கெட்டின் பயிற்றுவிப்பாளர்கள், வீரர்கள், நிர்வாகிகள், நிர்வாகம் மற்றும் ஆதரவு ஊழியர்களுக்கு தனது கடிதம் மூலம் நன்றி தெரிவித்திருந்தார். இந் நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லே டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

36 வயதான உபுல் தரங்க இறுதியாக 2019ஆம் ஆண்டு கேப்டவுனில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான சர்வதேச கிரிக்கெட் தொடரில் பங்கேற்றார்.

31 டெஸ்ட் மற்றும் 235 ஒருநாள் போட்டிகளில் இலங்கைக்காக முறையே 1,754 ஓட்டங்களையும், 6,951 ஓட்டங்களையும் எடுத்த தரங்க, இரு இனிங்ஸ்களிலும் சராசரியாக 31 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார்.

அத்துடன் தரங்க 22 ஒருநாள், 6 இருபது -20 போட்டிகளுக்கு இலங்கை அணிக்கு தலைமை தாங்கியுள்ளார். டெஸ்டில் அவர் அடித்த 3 சதங்களையும், ஒருநாள் போட்டிகளில் 15 சதங்களையும் அடித்துள்ளார். (ஐ)



## கோல்ப் வீரர் வூட்ஸ் விபத்தில் படுகாயம்

நியூயோர்க், பெப். 25

கோல்ப் விளையாட்டின் பிரபல வீரர் ரைகர் வூட்ஸ் கார் விபத்தில் சிக்கிப் படுகாயம் அடைந்தார்.

இது தொடர்பில் வெளியான தகவல்களின் விவரம் வருமாறு:

"கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள ரோலிங் ஹில்ஸ் பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 7.12 மணியளவில் ரைகர் வூட்ஸ் சென்ற கார் விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் வூட்ஸின் கார் பலத்த சேதம் அடைந்தது.

ரைகர் வூட்ஸ் இரு கால்களிலும் பலத்த காயம் அடைந்துள்ளார். அவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். உயிருக்கு ஆபத்து இல்லை என்றும், காலில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றும் மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டது." என்று செய்தி வெளியானது.

விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த ரைகர் வூட்ஸ் கோல்ப் விளையாட்டில் 15 முறை சம்பியன் பட்டங்களை வென்றவர். வூட்ஸ் கடைசியாக 2019ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய அவதாரம் எடுக்கிறார் தினேஷ் கார்த்திக்

சென்னை, பெப். 25

இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக், இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நடக்கும் ஒருநாள், இருபது - 20 தொடரின் போது புதிய அவதாரம் எடுக்க உள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டன் டோனியும், தினேஷ் கார்த்திக்கும் சமகால சேர்ந்த விக்கெட் காப்பாளர்கள். ஆனால், தோனி ஜொலித்த அளவுக்கு தினேஷ் கார்த்திக்கால் பிரகாசிக்க முடியவில்லை. இந்திய அணியில் நீண்ட காலத்துக்கு விக்கெட் காப்பாளர் இடத்தை டோனி ஆக்கிமிரத்துவிட்டார். இதனால், சில தொடர்களுக்கு மட்டுமே தினேஷ் கார்த்திக்கு வாய்ப்புக் கிடைத்தது.

அந்த வகையில் தினேஷ் கார்த்திக் இதுவரை 92 ஒருநாள் போட்டிகளில் 1,752 ஓட்டங்களும், 32 இருபது - 20 போட்டிகளில் 399 ஓட்டங்களும் சேர்த்துள்ளார். கடந்த 2019-ம் ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்குப் பின் தினேஷ் கார்த்திக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

இந்நிலையில், இந்தியா, இங்கிலாந்து தொடரை ஒளிபரப்பும் உரிமையை வாங்கியுள்ள ஸ்கை ஸ்போர்ட்ஸ் வர்ணனையாளர்கள் பட்டியலில் தினேஷ் கார்த்திக் கையும் ஒப்பந்தம் செய்துள்ளனர்.

ஸ்கை ஸ்போர்ட்ஸ் சனலின் வர்ணனையாளர்கள் குழுவில் தினேஷ் கார்த்திக் மட்டுமே இந்திய வீரர். மற்றவர்களான டேவிட் லாய்ட், நாசர் ஹூசைன், இயன் வார்ட், இபோனி ரெயின்போர்ட் பிரன்ட், மைக்கேல் ஆத்தர்டன், ராப் கீ, ஸ்ருவர்ட் பிரொட் ஆகியோர் உள்ளனர்.

விரைவில் வர்ணனையாளர் பொறுப்பை ஏற்பார் என்று தினேஷ் கார்த்திக் தெரிவித்தார். (ஐ)






## ஐ.பி.எல்லா? டெஸ்டா? சபையே முடிவு செய்யும்!

### முஸ்தபீர் ரஹ்மான்

டாக்கா, பெப். 25

பங்களாதேஷ் வீரர் முஸ்தபீர் ரஹ்மானை ஐ.பி.எல். ஏலத்தில் ஒரு கோடி ரூபாவுக்க ஏலம் எடுத்தது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி. ஆனால், அவர் தற்போது ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஐ.பி.எல். தொடர் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் நடக்கவுள்ளது. இக்காலப்பகுதியில் பங்களாதேஷ் அணி இலங்கை அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்நிலையில், இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும்படி தெரிவித்தால் நான் நிச்சயம் நாட்டுக்காக விளையாடுவேன் என்று முஸ்தபீர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மேலும், 'பங்களாதேஷ் கிரிக்கெட் சபை எதை விரும்புகிறதோ, அதை நான் செய்வேன். அவர்கள் என்னை டெஸ்ட் தொடரில் விளையாடுமாறு கூறினால் நான் அதிலேயே விளையாடுவேன். அவர்கள் என்னை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாட வேண்டாம் என்று விரும்பினால், அதன்பின் நான் என்ன செய்வேன் என்பது உங்களுக்குத் தெரியும். எனது முன்னுரிமை நாட்டுக்காகவே இருக்கும்" என்றார். (ஐ)



# சர்வதேச விண்வெளி திட்டத்தில் மட்டக்களப்பு ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமி

மட்டக்களப்பு, பெப்.25

ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமி (DreamSpace Academy) - இலங்கையின் மட்டக்களப்பை மையமாகக் கொண்ட ஒரு சமூக புத்தாக்கம் நிலையம் (Community Innovation Center) சர்வதேச விண்வெளி நிலையத்தின் (International Space Station) செயல்திட்டத்தில் பங்கேற்கின்றது.

இந்த விண்வெளி செயல்திட்டத்தில் இலங்கை இளைஞர்கள் 18 முதல் 23 வயதுக்குட்பட்டோர் பங்கேற்பது இதுவே முதன்முறையாகும்.

ட்ரீம்ஸ்பேஸ் அகடமி இலங்கையில் வசதி குறைந்த இளைஞர் - யுவதிகளுக்கு விண்வெளி ஆய்வகம் (Space Lab) ) உள்ளிட்ட மேம்பட்ட ஆய்வகங்களுக்கு (Advanced Multidiciplinary Labs) நிபந்தனையற்ற அணுகலுடன் திறன் வலுவூட்டல் செய்கின்ற ஒரு ஸ்தாபனமாகும்.

ரெட் கிலோவ்வின் Red Clove) விதைகள் மற்றும் நைட்ரஜன் உருவாக்கும் பக்ரீரியாக்களுடன் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஒரு தன்னிறைவான எக்ஸோலாப்பை (ExoLab) அனுப்புவதன் மூலம் உயிரினங்களில் மைக்ரோ கிராவிட்டி விளைவுகளை ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமி (DreamSpace Academy) அதன் முதல் விண்வெளி திட்டத்தில் ஆராய்கிறது.

இச்செயல்திட்டமானது Cygnus NG-15 விண்கலம் மூலம் 20 பெப்ரவரி 2021 இலங்கை நேரப்படி இரவு 11.06 மணிக்கு வலலோப்ஸ் ஐஸ்லாந்து, விர்ஜினியா அமெரிக்காவிலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டது.

விண்வெளி மற்றும் பூமியில் நாற்றுகளின் வளர்ச்சியை ஒப்பிடுவதற்கு பூமியில் உள்ள அணிகள் மற்றும் விண்வெளியிலும் ஒரே நேரத்தில் பரிசோதனையை மேற்கொள்ளுவதோடு, றெட் கிலோவ்வின் (Red Clove) மற்றும் ரைசோபியம் இடையேயான தொடர்பு பற்றி ஆய்வினையும், ISS இலிருந்து படங்களில் வேர் முடிச்சு மற்றும் தாவர வளர்ச்சியை அடையாளம் காண இயந்திர கற்றல் கருவியை உருவாக்கும் செயன்முறையில் ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமியின் விண்வெளி ஆய்வகத்தின் கார்டியன் சம்ரத், குழு உறுப்பினர்களான ஃபாலில், அபிஷேத்வர்மன், ரிணாந் தினி மற்றும் அபிலாஜினி ஆகியோருடன் இந்த பரிசோதனையை மேற்கொள்ளளவுள்ளனர். இவ் ஆய்வு செயன்முறையில் இலங்கையிலிருந்து பங்குபற்றும் ஒரே ஒரு குழாம் ட்ரீம்ஸ்பேஸ் அக்கடமியாகும். (எ)

# இலங்கையில் யுத்தம் முடிவுக்குவர பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியது

## பிரதமர் இம்ரான் கான் பெருமிதம்



**கொழும்பு,பெப்.25**

**இலங்கையில் 30 வருட காலப் போரை முடிவுக்குக் கொண்டுவர பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியதை நினைவுபடுத்துவதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றானது உலகில் நிலவும் சமத்துவமின்மையை நன்கு வெளிக்காட்டியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர், இணை ஊடக சந்திப்பொன்றை நடத்தியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

எமது இரு நாடுகளும் பயங்கரவாதம் எனும் பொதுவான பிரச்னைக்கு முகங்கொடுத்த நாடுகளாகக் காணப்படுகின்றன. மிக மோசமான பயங்கரவாதத்துக்கு 10 ஆண்டுகளாக பாகிஸ்தான் முகங்கொடுத்தது. இதனால், 70 ஆயிரம் உயிர்களை நாம் இழந்தோம்.

அதேபோன்று இலங்கையும் 30 வருட காலம் பயங்கரவாதத்துக்கு எதிராக போராடியது. இலங்கையில் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியதை இந்த இடத்தில் நினைவுபடுத்துகிறேன்.

சுற்றுலாத்துறையின் மீது தங்கியுள்ள இலங்கையின் அபிவிருத்தி இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டினால் முன்னேற்றமடைய முடியாது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டில் முதலீடுகளைச் செய்ய முடியாது. பாகிஸ்தானில் பயங்கரவாதம் தலைவிரித்தாடிய 10 ஆண்டுகளில் சுற்றுலாத்துறையே இருக்கவில்லை. எந்தவிதமான முதலீடுகளும் பாகிஸ்தானுக்கு கிடைக்கவில்லை.

தற்போது கொரோனா வைரஸ் நெருக்கடி வறிய நாடுகளையும் அவற்றில் வாழுகின்ற வறிய மக்களையும் கடுமையாகப் பாதித்துள்ளது என்பதை அபிவிருத்தியடைந்த நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். வறுமையான நாடுகள் எவ்வாறு கடன் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றியும் நாம் கலந்துரையாடினோம்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாகிஸ்தான் தனது வரலாற்றிலேயே 8 பில்லியன் டொலர் பெறுமதியான மிகப் பெரிய நிவாரண உதவித் திட்டத்தை அமுல்படுத்தியது.

கொரோனா வைரஸ் தொற்றானது உலகில் நிலவும் சமத்துவமின்மையை நன்கு வெளிக்காட்டியுள்ளது. இதனால்தான் ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலக நிறுவனங்கள் கொரோனா வைரஸினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இவ்வாறான நாடுகள்குறித்து கவனம் செலுத்த வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை ஜனாதிபதி ரத்து செய்ய வேண்டும்

## சிங்கள ராவய போர்க்கொடி

கொழும்பு,பெப்.25

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில், தேசிய ரீதியான அமைப்புக்கள் மற்றும் இயக்கங்களின் உருவாக்கமே சஹ்ரான் போன்றவர்களின் செயல்பாடுகளுக்குத் தூண்டுதலாக அமைந்துள்ளது எனக் கூறப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

இந்த அறிக்கை எம் மீது குற்றம் சுமத்துவது போன்றே தோன்றுகிறது. எனவே, ஜனாதிபதி இந்த நியாயமற்ற அறிக்கையை இரத்துச்செய்துவிட்டு, வெற்றிகரமான செயல்படக்கூடிய குழுவொன்றின் மூலம் ஆராய்ந்து விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டும் என்று சிங்கள ராவய அமைப்பின் தலைவர் ஹக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையில், தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களைத் தண்டிப்பதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்படும் என்று எதிர்பார்த்தோம்.

எனினும், தேசிய ரீதியான அமைப்புக்கள் மற்றும் இயக்கங்களின் உருவாக்கமே சஹ்ரான் போன்றவர்களின் செயல்பாடுகளுக்குத் தூண்டுதலாக அமைந்ததாக அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

கடந்த காலத்தில் மாவனெல்லையில் புத்தர் சிலை உடைக்கப்பட்ட போதும் வனாத்தவில்லு பகுதியில் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட போதும் நாம் பலமுறை எச்சரித்திருந்தோம்.

எனினும் அதனுடன்தொடர்புபட்டிருப்பதாகக் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு அஸாத் சாலியால் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக அப்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார். அந்தச் சம்பவங்களுடன்தொடர்புபட்டவர்களே உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர்.

எனவே அறிக்கையின் பிரகாரம் அஸாத் சாலி போன்றவர்கள் குற்றவாளிகளாக அறிவிக்கப்படுவார்கள் என்று கருதினோம். எனினும் அத்தகைய உள்ளடக்கங்கள் இருப்பதாக அறிய முடியவில்லை.

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி மேற்படி விசாரணை அறிக்கையில் உள்ளடக்கங்கள் எமக்குப் பெரும் அதிருப்தியளிப்பவையாகவே உள்ளன.

அடிப்படைவாதக் குழுவினர் இணைந்தா இந்த அறிக்கையைத் தயாரித்தார்கள் என்ற கேள்வியும் தற்போது எழுகின்றது. ஏனெனில் இதில் எம்மைக் குற்றவாளிகளாக சித்திரிக்கும் போக்கு காணப்படுவதாகவே தெரிகின்றது.

நாம் சஹ்ரான் போன்றவர்களின் செயல்பாடுகளை ஆராய்வதற்கும் எதிர்ப்பதற்குமே தேசிய ரீதியில் அமைப்புக்களை நிறுவினோம். எனவே, ஜனாதிபதி இந்த நியாயமற்ற அறிக்கையை இரத்துச்செய்துவிட்டு, வெற்றிகரமாக செயல்படக்கூடிய குழுவொன்றின் மூலம் ஆராய்ந்து விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டும்- என்றார். (எ)



# ‘டீல்’ அரசியல் காரணமாகவே பொருட்கள் விலை அதிகரிப்பு

## விஜித ஹேரத் சொல்கின்றார்

கொழும்பு, பெப். 25,

‘டீல்” அரசியலின் காரணமாகவே பொருட்களின் விலை அதிகரித்து, நாட்டின் பொருளாதாரம் வீழ்சியடைகின்றது. கிழக்கு முனையத்தை விற்க போவதில்லை என்று கூறிய துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன 2020 ஒக்ரோபர் 22ஆம் திகதி நுற்றுக்கு 49 வீதமான பகுதியை இந்திய நிறுவனத்திற்கு வழங்கவுள்ளதாக அமைச்சரவை பத்திரத்தை வெளியிட்டார்”

- இவ்வாறு கூறியுள்ளார் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த கருத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

‘வெள்ளையர்களிடமிருந்து நாடு சுதந்திரம் பெற்று 73 வருடங்கள் நிறைவை அண்மையில் கொண்டாடினோம். இருப்பினும் எமது நாடு அத்தகைய சுதந்திர நிலையில் இல்லை. பொருளாரதார, அரசியல், மற்றும் கலாசார ரீதியில நோக்கும்போது உண்மையில் எமக்கு சுதந்திரம் இல்லை. இது நாம் பெருமிதத்துடன கொண்டாடக் கூடிய சுதந்திர தினமாக இல்லை.

14 மாதங்களுக்கு முன்னரான எமது நாட்டின் நிலையை அனைவரும் அறிவர். ஏனெனில், சஹ்ரானின் குண்டுத்தாக்குதல்களை தொடர்ந்து நாடு அராஜக மற்றும் நிலையற்ற தன்மையில் காணப்பட்டது. நாடு பூராகவும் இனவாதம் வலுவடைந்திருந்தது.
இதிலிருந்து யாராவது எம்மை விடுவிப்பரா என்ற நிலைப்பாட்டில் பெரும்
பான்மையானோர் இருந்தனர்.

இந்த தருணத்திலேயே ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்றது. அப்போதே நந்தசேன கோட்டாபய வேட்பாளராக வந்தார். அவர் வரும் போது பல வர்ணனைகள் காணப்பட்டன. அண்மையில் தனக்கு இரு முகங்கள் இருக்கின்றன என்றார். அவருடைய சுயரூபம் இப்போதுதான் புலப்பட ஆரம்பித்துள்ளது. அது இவ்வளவு விரைவாக வெளிப்படும் என்று எதிர்பார்க்கவில்லை. நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் அவரிடம் எதுவுமில்லை. அவரால் யுத்தம் பற்றி மட்டுமே பேச முடியும். இதுவே உண்மை. ராஜபக்‌ஷ குடும்பத்தின் பலவீனமான வேட்பாளர் கோட்டாபய என்று நாம் முன்னரே கூறியிருந்தோம்.

கிழக்கு முனையத்தில் 49 வீதத்தை இந்தியாவுக்கு வழங்க சம்மதிக்கப்பட்டது. ஆனால், கடும் எதிர்ப்புக்களால் அது கைவிடப்பட்டது. ஆனால், அதற்கு மாற்றாக மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கவுள்ளனர். 49 வீதப் பகுதிக்கு பதிலாக 85 வீத நிலப்பரப்பை வழங்கவுள்ளனர்.

கல்வி tv
CHANNEL-1

காலை
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
பகல்
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சமயம் (நேரலை)
இரவு
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல் (நேரலை)

# பதில் பாதுகாப்பு அமைச்சரை மைத்திரி நியமிக்காதது தவறு

## முகத்தை மறைக்கும் ஆடைகளுக்கும் தடை
## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரை



**கொழும்பு, பெப். 25**

**கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிங்கப்பூர் விஜயத்தின்போது பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை எவருக்கும் வழங்கியிருக்கவில்லை. இது தொடர்பில் அவருக்கு எதிராக தண்டனைசட்டக் கோவையின் எந்தவொரு பொருத்தமான ஏற்பாட்டின் கீழும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன், தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய சட்டமா அதிபருக்கு அந்த ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

மேலும், குண்டுத் தாக்குதல்களை தடுக்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறும்படியும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ். மற்றும் சஹ்ரானின் அச்சுறுத்தல் இருப்பதை அறிந்திருந்தாலும் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 16-21ஆம் திகதி வரை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியா மற்றும் சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போதிலும் அவருக்கு பதிலாக பதில் பாதுகாப்பு அமைச்சரை நியமித்திருக்கவில்லை. அரசமைப்பின்படி ஜனாதிபதியின் விருப்பிற்கு அமைய பதில் பாதுகப்பு அமைச்சரை நியமிக்க முடியும். ஆனால், அவர் நியமிக்காமையினால் அரசமைப்பு மீறப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் குற்றச்சாட்டை முன்வைக்குமாறு ஆணைக்குழு பரிந்துரை செய்தபோதிலும் முன்னாள் ஜனாதிபதி, பிரதமரை பாதுகாப்பு சபையின் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்காமை தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் தொடக்கம் பிரதமர் விக்கிரமசிங்க பாதுகாப்பு சபை கூட்டங்களில் பங்கேற்கவில்லை. இதனை தொடர்ந்து அவர் மீண்டும் பிரதமராக கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னரும் முன்னாள் ஜனாதிபதி அவரை பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு அழைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி, விக்கிரமசிங்கவை பாதுகாப்பு சபைக்கு அழைக்காமல் விடும் அளவுக்கு ஏதுவான சாதாரண காரணங்கள் எதுவும் இருக்கவில்லை. இருப்பினும், ஜனாதிபதி தன்னை பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு அழைக்கவில்லை என்பது தொடர்பில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திலோ, அமைச்சரவை கூட்டத்தின் போதோ தெரிவித்திருக்கலாம். இருப்பினும் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னராக அவரை பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு ஜனாதிபதி அழைக்கவில்லை என கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

முன்னாள் ஜனாதிபதி சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் விக்கிரமசிங்கவிற்கு மேலதிகமாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணாண்டோ, முன்னாள் தேசிய புலனாய்வுத்துறை பிரதானி சிசிர மெண்டிஸ் , முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன, சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க உள்ளிட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு பொருத்தமான ஏற்பாடுகளை ஆராயுமாறு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேபோன்று பொதுபலசேனா, ஜமாத்தே இஸ்லாம் அமைப்பு, மற்றும் ஜமாத்தே இஸ்லாம் மாணவர் இயக்கம் ஆகிய அமைப்புக்களை தடை செய்ய வேண்டும் எனவும் அதில் அங்கத்துவம் வகிப்பவர்களின் செயற்பாடுகளை கண்காணித்து அந்த அமைப்புக்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு ஏதுவான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய வேண்டும். இதேபோல் இஸ்லாம் இராச்சியம் அமைப்பு போன்ற இனவாத அமைப்புக்களை நாட்டில் தடை செய்ய வேண்டும். அத்துடன், முகத்தை மறைக்கும் வகையிலான ஆடைகளை அணிவதை தடை செய்யவேண்டும் எனவும் உலக நாடுகள் பல முகத்தை மறைக்கும் வகையிலான ஆடைகளுக்கு தடை வித்தித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ அந்தப் பதவிக்கு மேலதிகமாக வேறு பல நிறுவனங்களின் உயர் பதவிகளில் இருந்தமையால் அமைச்சின் கடமைகளை உரிய வகையில் செயல்படுத்த முடியாது போயுள்ளமை தெரிய வந்துள்ளது. எனவே அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஒரு பதவியில் மாத்தரமே இருக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசர சட்டத்தை நடைமுறைப்படுத்த ஏதுவான வகையில் இலங்கை இராணுவத்தினுடைய ஒத்துழைப்பை பொலிஸார் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

சஹ்ரான், ரில்வான், ஷயினி, இல்ஹாம், இன்ஷாப், ஜமீல், ஹஸ்துன், முவாத், அசாத், முபாரக், நவூபர், மில்ஹான், சாதிக் மற்றும் மேலும் பலர் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுடன் நேரடித்தொடர்பை பேணியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இஸ்லாம் அடிப்படைவாதத்தை கொண்ட ஸ்ரீலங்கா ஜமாத்தே இஸ்லாம், ஸ்ரீலங்கா ஜமாத்தே இஸ்லாம் மாணவர் இயக்கம் தவ்ஹித் குழுக்கள் குண்டுத் தாக்குதல்களுடன் மறைமுக தொடர்புடையவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.
அதேவேளை, பொதுபல சேனா போன்ற அமைப்புக்களின் செயல்பாடுகள் குண்டுத்தாக்குதலுக்கு தூண்டும் வகையில் அமைந்துள்ளமையும் இதன் போது தெரிய வந்துள்ளது. கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்திய மொஹமட் இப்ராஹிம் இன்சாப் எனப்படும் குண்டுதாரியின் வெல்லம்பிட்டிய தொழிற்சாலைக்கும் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும் இடையிலான தொடர்பு குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக் குழு விசாரிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரச புலனாய்வு சேவை மற்றும் ஏனைய நிறுவனங்கள் பலவற்றினால் சஹ்ரானின் குண்டுத்தாக்குதல்கள் இடம் பெறவுள்ளமை தொடர்பில் அறிவிக்கப்பட்ட போதிலும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் அசமந்த போக்கில் செயற்பட்டமை தெரியவந்துள்ளது. ஆகவே தண்டனை சட்ட கோவையின் கீழ் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு அமைய அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

சகல மத தலைவர்களையும் உள்ளடக்கிய வகையிலான ஜனாதிபதி ஆலோசனை குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனவும் அதில் அரசியல்வாதிகளை உள்வாங்க கூடாது . இதேபோல் சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகளை கண்காணிக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன், மதத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளை உருவாக்குதவற்கு தடை விதிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.
இதேவேளை, பீஸ் தொலைக்காட்சியை நாட்டினுள் தடை செய்யவேண்டும் எனவும், ஏனைய நாடுகள் அந்த தொலைக்காட்சி சேவையை தடை செய்துள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களின் உரிமைகளுக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும்!

## ஜெனிவா அமர்வில் வலியுறுத்து

ஜெனிவா, பெப். 25

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கான முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைக்கு இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டியது அவசியம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கவுன்ஸிலின் 46ஆவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் நடந்த அமர்விலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் யூசுப் அல் ஒதைமீன் உரையாற்றினார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தினருக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சடலங்களை அடக்கம் செய்வதற்கான முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைக்கு மதிப்பளித்து, அதனை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மதரீதியான அடக்குமுறைகள், பின்தள்ளுதல், சகிப்புத்தன்மை இன்மை ஆகியவற்றுக்கு எதிராக சர்வதேசம் முன்னெடுக்கும் நடவடிக்கைக்கும் ஆதரவளிப்போம் - என்றார். (ஐ)

# சுங்கத் திணைக்களத்தை மதிப்பிட விசாரணை ஆணைக்குழு நியமனம்

## ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை



கொழும்பு, பெப். 25

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தற்போதைய நிலைமைகளை மதிப்பீடு செய்து, அதன் செயல்திறனை மேம்படுத்த பரிந்துரைகளை சமர்ப்பிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

சுங்கத் திணைக்களத்தின் மீதான பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்வது மற்றும் சுங்கத்திற்கு எதிரான முறைகேடுகளைத் தடுப்பது, திறமையான மற்றும் பயனுள்ள சேவைகளை வழங்குவது குறித்த பரிந்துரைகளை இந்த ஆணைக்குழு செய்யும்.

சுங்க தொழிற்சங்கங்களால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை மறுஆய்வு செய்வது உட்பட பொது மக்கள் மற்றும் பிற தரப்புக்களின் கருத்துக்களை கேட்கவும் ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இந்த ஆணைக்குழுவிற்கு உயர்நீதிமன்ற நீதிபதி ஷிரன் குணரத்ன தலைமை தாங்குகிறார். மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ, உயர் நீதிமன்ற நீதிபதி டமித் தொட்டவத்த, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் கே.எம்.எம் சிறிவர்த்தன, மூத்த ஆலோசகர் சனத் ஜெயநெத்தி மற்றும் இலங்கை சுங்க முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் பி.ஏ. டயஸ் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் 955 பேர் தனிமை!

## அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 25**

**யாழ். மாவட்டத்தில் தற்போது 487 குடும்பங்களை சேர்ந்த 955 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

**கொரோனா நிலவரம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.**



மேலும், யாழ். மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்கள் எண்ணிக்கை 232ஆக அதிகரித்திருக்கின்றது. நேற்றுமுன்தினம் 13 நபர்களுக்கு பருத்தித்துறை பகுதியில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் இந்த எண்ணிக்கை உயர்வடைந்து இருக்கின்றது.

அத்தோடு 190 பேர் இதுவரை பூரண குனமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் 487 குடும்பங்களை சேர்ந்த 955 நபர்கள் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொற்று சற்று அதிகரித்து வருவது கவலைக்குரியது. ஆகவே, தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் - என்றார். (ஐ-3)

# ஓ. எல். அனுமதி அட்டையை இணையத்தில் தரவிறக்கலாம்

கொழும்பு, பெப். 25

2020ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சை அனுமதி அட்டை கிடைக்காவிடின் இணைத்தளத்தில் பதிவிறக்கம் செய்ய முடியும் என்று பரீட்சைத் திணைக்களம் அறித்துள்ளது.

https://onlineexams.gov.lk/eic/index.php/clogin/ என்ற தளத்துக்குச் சென்று அனுமதி அட்டையின் பிரதிக்காக தேசிய அடையாள அட்டை எண் அல்லது பரீட்சை சுட்டெண்ணை உள்ளிட்டு பதிவிறக்கம் செய்யலாம் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# விபத்துக்களால் 12 பேர் உயிரிழப்பு

## பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, பெப். 25

வீதி விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் நேற்றுமுன்தினம் மட்டும் வீதி விபத்துக்களால் 12 பேர் உயிரிழந்தனர். 11 விபத்து சம்பவங்களில் சிக்கியே இவர்கள் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தில், 8 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், 2 பாதசாரிகள், 2 வாகன பயணிகளும் உயிரிழந்தனர் என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# வீடு திரும்பினார் சிவாஜிலிங்கம்

வடமராட்சி, பெப். 25

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று வீடு திரும்பினார்.

உயர் குருதி அமுக்கம் காரணமாக நேற்று முன்தினம் மாலை அவர் பருத்தித்துறை ஆதாரா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த அவரின் உடல்நிலை சீரானமையை தொடர்ந்து நேற்று மதியம் அவர் வீடு திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

# மன்னாரில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 260 ஆக உயர்வு

மன்னார், பெப். 25

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் 25 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதனால், அங்கு இதுவரை 260 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மருத்துவர் ரி. வினோதன் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் 25 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 24 நபர்கள் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும்,மேலும் ஒருவர் மடு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கில் அடையாளம் காணப்பட்ட 24 நபர்களில் கடந்த வாரம் தொற்றுடன் ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் அடையாளம் காணப்பட்டவரின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் வலைப்பாட்டு பகுதியில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட குடும்பத்துடன் நெருங்கி பழகியவர்கள்.

மேலும் சாவக்கச்சேரிப் பகுதியில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

மடுவில் அரச அலுவலகம் ஒன்றில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.இவர்களுடன் சேர்த்து மன்னார் மாவட்டத்தில் இதுவரை 260 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில்,இந்த வருடம் ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரு மாதங்களில் 243 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் உடலில் உள்ள வைரஸின் அளவு மிகவும் கூடுதலாக இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதனால் இவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பலர் இலகுவாக தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர். இந்த நிலமை பாரதூரமானது. எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றிக் கொள்ள வேண்டும் - என்றார். (எ)



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒருதிருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவிலலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவசித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி :சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றையபத்திரிகைகளில்
8.30 மணி : காலைசெய்திகள்
9.00 மணி : கலாட்டாகாலை - நேரலை
10.30 மணி :தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி :சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**

1.00 மணி :நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி :சுப்பர் சீன்ஸ்
திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரைநேரம்
6.00 மணி :வெள்ளித்திரை - கபடதாரி




**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :மாதம் ஒரு இசைக்குழு - இசைநிகழ்ச்சி



10.00 மணி :யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சமயம் (நேரலை)

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல் (நேரலை)

---

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : வவுனியா அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருகோணமலை திருக்கோணேஸ்வரம் கோவில் திருவிழா
01.00 மணி : ஐந்தாவது முருகபக்தி மாநாடு 2021 (இணையவழி) நேரலை
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : வவுனியா அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.